சிறப்பிதழ்
**Special Issue**

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

20 மாசி 2052
04th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*
Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : **பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021**
**தமிழ்த்துறை,**
ந.க.ம. கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

# தமிழ் இலக்கியத்தில் ஆளுமை

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. சித்ரகலா**
உதவிப்பேராசிரியர்

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

13 பகுதி-2 Part -2

| | | | |
|---|---|---|---|
| 55. | வ.மோகனப்பிரியா | சிவனும் சக்தியும் - தேவாங்க புராணம் சார்ந்து சில குறிப்புகள் | 240-242 |
| 56. | ப.லெட்சுமி | அடியார்க்குநல்லாரின் படைப்பாளுமை | 243-245 |
| 57. | மு.ரா. சித்ரா தேவி | அகநானூற்றில் தோழியின் ஆளுமை | 246-249 |
| 58. | மு.கவிதாதேவி | திருக்குறள் கூறும் நீர்மேலாண்மையில் அறிவியல் ஆளுமை | 250-254 |
| 59. | செ.சண்முகவடிவு<br>சு.பிரசாத் | திருக்குறளில் தனிமனித ஆளுமை மேம்பாடு | 255-260 |
| 60. | க. கோமதி | செவ்வியல் இலக்கியங்களில் மனிதமேம்பாடு | 261-265 |
| 61. | T. ராதிகா | கவிஞர் தமிழ்க்குழவி படைப்புகளில் ஆளுமை திறன் | 266-268 |
| 62. | இரா.விஷ்ணுப்பிரியா | தனிமனித வெற்றிக்கு வள்ளுவரின் ஆளுமைக்கூறுகள் | 269-273 |
| 63. | க. ராஜ்குமார் | நெடுநல்வாடையில் ஆளுமையும் ஆளுமை சிதைவும் | 274-277 |
| 64. | வெ.முருகேஸ்வரி | சூல் புதினத்தில் ஆளுமை குறித்த பதிவுகள் | 278-281 |
| 65. | க.தனலட்சுமி | விழுமியங்களும் ஆளுமைகளும் | 282-286 |
| 66. | அ.நித்யா | பாலைத்திணைப் பாடல்களில் தோழியின் ஆளுமைத்திறன் | 287-290 |
| 67. | கா. திருநாவுக்கரசு<br>செ.விஸ்வநாதன் | திருக்குறள் நெறியில் ஆளுமைத்திறன் மேம்பாடு | 291-295 |
| 68. | செ. மாணிக்கராஜ்<br>இரா. பிரான்சிஸ் சேவியர் | முல்லைப்பாட்டில் புதைந்துள்ள தனி மனித ஆளுமைகள் | 296-299 |
| 69. | ரா.பிறாக்ஸி | திருக்குறளில் மனித ஆளுமை | 300-304 |
| 70. | மு. மகாலெட்சுமி | சொரிமுத்தையனார் கோவில் வரலாறும் மனித ஆளுமையும் | 305-308 |
| 71. | சு.இராமதிலகம் | இறையன்புவின் படைப்பாளுமை | 309-312 |
| 72. | பெ.தவசி | திருக்குறள் உணர்த்தும் ஆளுமை | 313-316 |
| 73. | எம்.மெஹ்முதா | விருந்தோம்பலில் அன்பின் ஆளுமை | 317-319 |
| 74. | த.பத்மா | அம்பை சிறுகதையில் பெண்ணின் ஆளுமை | 320-324 |
| 75. | க.ஷகிலாலோகநாயகி | திருமூலரின் இலக்கியத்தில் மனிதனின் ஆளுமை | 325-328 |
| 76. | ந. பிரகாஷ் | கொங்கு நாட்டு வள்ளல்கள் | 329-334 |
| 77. | அமுதா அன்பழகன் | புலம்பெயர்நாட்டுத் தமிழ் மொழிக் கல்வியில் பாரதியார் பாடல்கள் | 335-340 |
| 78. | கி.நாகரத்தினம் | அறநூல்கள் வழிநட்பில்நெறிப்படுத்துவதன் இன்றியமையாமை | 341-345 |
| 79. | பா.பேபி ஷாலினி | கம்பராமாயணத்தில் குகனின் ஆளுமை | 346-350 |
| 80. | சு.பரணி | கற்றாழை நாவலில் மணிமேகலையின் ஆளுமை | 351-356 |
| 81. | ம.கீதா | தமிழ் இலக்கியத்தில் மனிதநேயம் | 357-360 |
| 82. | செ. செல்லபாண்டி | கொ.மா.கோதண்டம் நாவலில் குறிஞ்ஞும் பூ நாவல் பெண்ணிய ஆளுமை | 361-363 |
| 83. | கா.கவிதா | புலம்பெயர் நாவலில் ஆளுமைப் பண்புகள் | 364-367 |
| 84. | ர. பாலதாரணி<br>க.தனலட்சுமி | ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் கருத்தாளுமை | 368-373 |
| 85. | ஆ.சந்திரசேகர் | தாழ் உடைத்து(அ)லட்சியமாக நடக்கும் நதி | 374-377 |
| 86. | பா.அருள்ஜோதி | சுந்தரர் பாடல்களில் ஆளுமை | 378-382 |
| 87. | குமாரசாமி தயாளினி | முத்தமிழ் ஆளுமை பிரம்மஸ்ரீ மா.த.ந வீரமணிஐயர் | 383-386 |
| 88. | க.சுந்தரமூர்த்தி | கம்பனின் படைப்பாளுமை | 387-389 |
| 89. | த. பரமேஸ்வரி | நாலடியார் நவிலும் வாழ்வியல் ஆளுமைகள் | 390-394 |
| 90. | உ.மணிமேகலை | மலைபடுகடாமில் ஆளுமை | 395-397 |
| 91. | இரா.சங்கீதா | கம்பராமாயணத்தில் திருக்குறளின் ஆளுமை | 398-402 |
| 92. | ம.இராஜகோபால் | தமிழ்மகன் புதினங்களில் ஆளுமைக் கூறுகள் | 403-407 |
| 93. | ரா.சிவக்குமார்<br>C.விஸ்வநாதன் | வேதாத்திரியத்தில் ஆளுமைத்திறன் | 408-410 |
| 94. | ப.கார்த்திக் | திருமூலரின் நெறி ஆளுமை | 411-413 |
| 95. | மு.சுகந்தி | உயிர் எழுத்து இதழின் - ஆளுமை வெளிப்பாடும் படைப்பாளர்களுக்கான ஆளுமை சுதந்திரமும் | 414-419 |
| 96. | இரா.ஜெயந்தி | சங்க இலக்கியத்தில் முருக வழிபாட்டின் ஆளுமை | 420-424 |
| 97. | பா. விக்னேஷ்குமார் | பாரதியாரின் ஆளுமை | 425-427 |
| 98. | R. எழில்ராமன் | நாட்டுபுற இசை மரபில் வாழ்வியல் மாற்றங்கள் | 428-430 |
| 99. | பொ. பிரியா | அம்ருதா இதழ்ச் சிறுகதைகளில் காணலாகும் உத்திகள் | 431-435 |
| 100. | ப.பத்மா<br>காசிபட்டா சத்தியமூர்த்தி | ஆண்டாளின் பக்தி ஆளுமை | 436-442 |
| 101. | கா. மகேசுவரி | தமிழ் இலக்கியங்களில் பெண்பாற் புலவர்களின் ஆளுமை திறன் | 443-445 |
| 102. | கோ. சரண்யா | கவிஞர் மீராவின் படைப்பாளுமை | 446-447 |
| 103. | து. யோககலைவாணி | பிரபஞ்சனின் சிறுகதைகளில் படைப்பாளுமை | 488-451 |
| 104. | த. திலகவதி | சாருநிவேதிதாவின் ஸீரோ டிகிரி நாவலின் அவந்திகாவின் ஆளுமை | 452-455 |
| 105. | ம.காயத்ரி | அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் ஆளுமை வெளிபாடு | 456-458 |
| 106. | கி. புவனேஸ்வரி | வாயிலில் தோழியின் ஆளுமை | 459-462 |
| 107. | ஆ. ஜோதி | ஐங்குறுநூற்றில் தோழியின் ஆளுமைப்பண்பு | 463-466 |
| 108. | ம. சித்ரகலா | கம்பனின் படைப்பாளுமையில் வீடணனின் பண்பாளுமை | 467-471 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

மற்றொன்று

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

(கலை & மனிதவியல்)

ஜனவரி - மார்ச்
ஏப்ரல் - ஜூன்
ஜூலை - செப்டம்பர்
அக்டோபர் - டிசம்பர்

Journal of

# CLASSICAL THAMIZH

*(A Quarterly International Multi latiaral Thamizh Journal)*

January - March
April - June
July - September
October - December

ISSN:2321-0737

# சூல் புதினத்தில் ஆளுமை குறித்த பதிவுகள்

வெ.முருகேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ந.க.ம கல்லூரி, பொள்ளாச்சி.

ஆய்வுச் சுருக்கம்

மனித இனத்தின் முறையான வாழ்க்கையில் ஆளுமையானது முக்கிய இடம் வகிக்கின்றது. மனிதர்களிடையே காணப்படும் பண்பு, குணம், திறன் போன்ற பல நிலைகளும் ஆளுமையின் பாற்பட்டவை. 'சூல்' என்ற புதினத்தின் வழியாக இடம்பெறும் நீர்ப்பாய்ச்சியின் மூலம் நீர் மேலாண்மை குறித்தும், நீர் எவ்வாறு பங்கீடு செய்யப்படுகின்றன என்பது குறித்தும், அறிய முடிகிறது. விவசாய நிலத்திற்கு இயற்கை உரமிடுவதன்வழி சங்கனது தனிமனித ஆளுமை வெளிப்படுகின்றது. உழவுத்தொழிலில் தலைமைத்துவப் பண்புகள், உழவர்களிடையேயான ஒற்றுமை ஆகியன குறித்தும் விவசாயிகளின் காப்பானாக விளங்கும் தாவரங்கள் குறித்தும், ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. அவ்வகையில் சமுதாய விழுமியங்களில் காணப்படும் மக்களின் ஏற்ற இறக்கங்கள், பழக்க வழக்கங்கள், கூட்டு வாழ்க்கை முறைகள், வள்ளுவன் தந்த குரல் மூலம் வாழ்வை எடுத்தாலும் திறன் மேம்பாடு யாவும் எவ்வாறு மனித வாழ்வில் பரந்து கிடக்கின்றன என்பதையும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் ஆளுமை குறித்த பதிவுகள் அதிகமாக இடம்பெறுகின்றன. மக்களின் மொழி, கலாச்சாரம் மற்றும் சமயம் போன்றவை தமிழ் இலக்கண இலக்கியங்களில் பல வடிவங்களில் இருப்பதை நாம் காண்கிறோம். நாடு, சமுதாயம், தனி மனித வாழ்வியலோடு 'ஆளுமை' என்ற பன்முகநோக்கு கொண்டவையாக நாம் பார்க்க முடிகிறது. உயிர் வாழ்வதற்கான வாழ்வாதாரங்களும், மக்களின் கலாச்சாரமும், பழக்கவழக்கங்களும் பிண்ணிப் படர்ந்துள்ளதை நாம் காணமுடிகிறது. ஆளுமையின் அடையாளங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் இலக்கியங்கள் வழியாக பல நிலைகளில் கண்டும் கேட்டும் உணரமுடிகின்றது. இயற்கையின் வாழ்வியலில் கூட நாம் ஆளுமையை கண்டுணர முடிகிறது. இப்படி பல இடங்களில் பல நேரங்களில் தன் தனித்துவத்தைப் பதிவு செய்வது ஆளுமையின் அடையாளங்களாய் இருப்பதை இக்கட்டுரையில் நாம் காணமுடிகிறது.

## ஆளுமையின் பொருள்

'ஆளுமை' என்ற பொருளைக் குறிக்கும் 'பர்சனாலிட்டி' என்னும் சொல் அன்றாட வாழ்வில் பலரால் பயன்படுத்தப்படுகிறது. நல்ல தோற்றம் உடைய போற்றுதற்குரிய விரும்பக் கூடிய சிலரை 'ஆளுமை உடையவர்' என்று அழைக்கிறோம். பர்சனாலிட்டி என்ற ஆங்கில வார்த்தை 'பர்சானோ' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். நாடக மேடையில் தோன்றி நடிப்பவர் தன்னுடைய கதாபாத்திரத்திற்கு ஏற்ற முகமூடி அணிந்திருப்பார். தற்சமயம் ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வெளி மற்றும் அகப்பண்புகளின் தொகுப்பைக் குறிக்கும் சொல்லாக ஆளுமை என்ற சொல பயன்படுத்தப்படுகிறது. ஆளுமை என்பது தனித்தன்மை வாய்ந்தது ***"ஒருவரின் பண்பான நடத்தை மற்றும் சிந்தனை ஆகியவற்றை தீர்மானிக்கின்ற அவரின் உள மற்றும் உடல் சார்ந்த அமைப்புகளில் மாறக்கூடிய கட்டமைப்பு ஆளுமையாகும்"***[1] என்பது ஆல்போர்ட்டின் கூற்றாகும்.

*"அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம், நன்றியுணர்வு, தந்திரம் போன்ற பல விதமான பண்புகளும் அவனுடைய ஆளுமையில் அடங்கும்"*[2] என்ற கருத்தை வாழ்வியல் களஞ்சியம் முன்வைக்கின்றது.

**நீர் மேலாண்மை**

நீர்ப்பாய்ச்சி என்பவன் கண்மாயின் மடையைத் திறந்து சுற்றி உள்ள வயல்களுக்கு நீரைப் பாய்ச்ச ஒரு பணியாளர். சரியான கால முறை பார்த்து பயிர்களுக்கு நீரினைப் பங்கீடு செய்வதில் திறமையானவராக காணப்படுகிறார். நீர்ப்பாய்ச்சி பரம்பரை பரம்பரையாய் மடையைப் பராமரித்து நீரினை பங்கீடு செய்வதில் நீர்ப்பாய்ச்சியின் பங்கு முக்கிய காரணியாக அமையும். ஒரு ஊரின் விவசாய வளர்ச்சிக்கு நீராதாரம் மட்டுமின்றி நீர் மேலாண்மையும் முக்கிய காரணமாக அமைகின்றது. இதன் மூலம் நீர்ப்பாய்ச்சியின் ஒட்டுமொத்த திறமையும் பொறுப்பும் காணமுடிகிறது.

**சங்கன் ஆளுமை**

**'சூல்'** என்ற புதினத்தில் இடம்பெறும் கதாபாத்திரத்தின் வழி குப்பைகளை இயற்கை உரமாகப் பயன்படுத்தப்படுவதை அறிய முடிகின்றது. குப்பைகளைக் கூடையில் அள்ளித் தன் இரு கைகளாலும் ஏந்தி இலாவகமாய் நிலத்தில் வட்டமாகச் சுழற்றி வீசும் போது அவை சிதறிவிழும். அதனுடன் வெள்ளை வெளேரென்று நிலத்தில் விழும் குப்பைப் புழுக்கள் பருத்திச் சுளைகளாய் நிலத்தில் சிதறி கிடக்கும் அழகினை இப்புதினம் நமக்கு உணர்த்துகின்றது.

குப்பைகள் நிலத்திற்கு இயற்கை உரமாகப் பயன்படுத்தப்படுவதால் நிலத்தின் தனித்தன்மை மேலோங்குகிறது. கரம்பை மண் அடித்து குப்பைக்குமி சிதறி கண்மாய்க்கரையின் வழியானது மூடிவிட்டால் விதைப்புக்குத் தயார் படுத்துகிற வேலை ஆரம்பமாகிவிடும். நெல் நாற்று பாவுவது, கரும்பு நடுவது, வாழைக்கு வரப்பு கட்டுவது, வெற்றிலைக் கொடிக்காலை அழித்து அகத்தி விரிச்சிகளை நார் தோண்டி எடுப்பது போன்ற வேலைகளை செய்வது விவசாயத்தின் ஒரு பங்காகக் காணப்படுகிறது. இவ்வாறு இயற்கை உரங்களையிட்டு விவசாயம் மேற்கொள்ளும்போது அது அதிக விளைச்சலை தருவதோடு மட்டுமின்றி உடலுக்கு தீங்கில்லா தானியங்களைப் பெறமுடிகிறது.

இதன் மூலம் நிலத்தின் தனித்தன்மை வெளிப்படுகின்ற சங்கனின் உழைப்பையும் ஆளுமைத் தன்மையும் அறிய முடிகின்றது.

**தனிமனித ஆளுமை**

தனிமனித ஆளுமை என்பது ஒருவரின் அன்பு, கோபம் மற்றும் பல நற்பண்புகளைச் சுட்டிக்காட்டுகிறது. தன்னையும் தன்னைச் சார்ந்த மக்களையும் எப்போதும் கலகலப்பாகவும் சிந்தனையைத் தூண்டும் பேச்சுக்களும் மக்களின் நன்மதிப்பைப் பெற தனிமனித ஆளுமை தேவைப்படுகிறது. மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, அன்னை தெரசா போன்ற எண்ணற்ற மனிதர்களின் தனிமனித ஆளுமை வியக்கத்தக்க ஒன்றாக இருப்பதை காணமுடிகிறது.

சமுதாயத்தில் மனிதர்களோடு மனிதனாக வாழும் முத்துவீரனின் கதைப்படைப்பு எப்போதும் ஒரு சுறுசுறுப்புள்ள மனிதராகவும் வாழும் காலங்களில் தனக்குத் தெரிந்த செய்திகளை பிறருக்கத் தெரியப்படுத்துவதில் விருப்பம் உடையவராய் இருப்பதாக பதிவு செய்கிறது. இயற்கை பற்றியும் பறவைகள் பற்றியும் அவர் கூறும் தகவல்கள் மனித சமுதாயத்தின் அங்கமாகக் காணப்படுகிறது. இவரின் கலகலப்புப் பேச்சுக்கள் மற்றவர்களைக் கவரும் வண்ணமாகவும் ஆர்வமுடையதாகவும் இருக்கின்றது. அவரின் நம்பிக்கையான பேச்சுக்கள், வார்த்தைகள் யாவும் தனிமனித ஆளுமையை அடையாளப்படுத்தி பயணிக்கின்றன.

**உழவுத் தொழில்**

உழவுத் தொழில் செய்வதில் தனி மனித உழைப்பும் சமுதாய வளர்ச்சியும் இங்கு வெளிப்படுகின்றது. இதுவே கூட்டாகச் செய்யும் போது வேலைகள் விரைவாக முடிகின்றது. இங்கு அவர்களின் கூட்டு மனப்பான்மை இதில் தெரிகிறது. முன்னத்தி ஏருடன் பின்னத்தி ஏரும் செல்லும்போது அவைகளின் ஒற்றுமை, தலைமைத்துவப் பண்புகள் பளிச்சிடுகின்றது. மனிதன் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதை இந்த கூட்டொழவு நமக்கு உணர்த்துகின்றன. மனிதன் சமுதாயத்தின் ஒரு அங்கமாகவும் அவற்றின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு தன் விருப்பு வெறுப்புகளைக் காட்டியும் இந்த கூட்டு வாழ்க்கை முறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வாழ்கின்றார்கள். உழவுத்தொழில் மட்டுமல்லாது பிற தொழில்களிலும் தொழில் சார்ந்த அமைப்புகளிலும் மனிதன் இணைந்தே பயணம் செய்கின்றான்.

**விவசாயியின் காப்பான்**

ஒரு அரசன் போர்க்களத்தில் தன் பகைவரை வென்று வாகைப் பூச்சூடுதல் 'வாகை' என்பர். வாகை என்பது வாகை மலரைக் குறிக்குமாயினும் புறப்பொருளின்கண் வெற்றியினையே குறித்து நிற்பதாகும். வாகை என்பது பாலை நிலத்தில் உயர்ந்து செழித்து வளரும் ஒரு வகை மரம். வாகை மரத்தின் மலர் நீரற்ற பாலை நிலத்திலும் செழித்து வளரும். அதுபோன்று போர்க்களத்தில் பகைவரை வென்று உயர்ந்த அரசர்கள் சூடுவதற்குத் தக்க மலராகும் என்று கருதிய பெரியோர் இத்திணைக்கு வாகை எனப் பெயரிட்டனர்.

இவ்வொழுக்கம் அரசர்க்கே உரிய சிறந்த பண்பு எனக் கருதாமல், மக்களில் சிறந்தவர்களுக்கும் இது பொருத்தமாகும்.

"வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கை தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப"[3]
(தொல்,பொருள்,புறத்,நூ.15)

என்று தொல்காப்பியர் இலக்கணம் செய்தார். அதாவது, குற்றமற்ற கொள்கைகளைக் கொண்ட பெரியோர் தமக்குரிய ஒழுக்கங்களை **'மிகுதிப்படுத்திக் கூறுதல்'** அல்லது **'மேம்பட்டு உயர்த்தல்'** என்பது இதன் பொருளாகும்.

கடும் கோடையிலும் ஆதாளைச் செடியும் கொக்கிரவாளிச் செடியும் ஒற்றை வேரில் உயிர்வாழும் என்பதை **'சூல்'** என்ற புதினம் எடுத்துரைக்கின்றது. சங்க இலக்கியங்களில் பாலைநில வாகை மலரும். இப்புதினத்தில் இடம்பெறும் ஆதாளைச் செடியும் கொக்கிரவாளிச் செடியும் கோடையிலும் உயிர்வாழும் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது. அன்று வாகை மலர் வெற்றிக்கு அடையாளமாகவும் இன்று விவசாயத்திற்கு உயிர்நாடியாக விளங்கும் கண்மாயின் கரைகளில் காணப்படும் ஆதாளையும் கொக்கிரவாளியும் காப்பானாய் இருக்கின்றது. இதிலிருந்து அரசர்களின் ஆளுமைத் தன்மையை சிறிய வகைச் செடிகளின் மூலம் உணர்த்தியிருப்பதை அறிய முடிகின்றது.

**சமுதாய விழுமியங்கள்**

கிராமங்களில் மக்கள் இயற்கையோடும் காலத்தினோடும் சேர்ந்தே பயணம் செய்தனர். அதோடு தெய்வம் நம்பிக்கைகளும் மற்ற பழக்க வழக்கங்களும் நிறைந்து காணப்படுகின்றன. மழைக்காக திருவிழா நடத்துவது, மழையை வழியனுப்புதல், கடவுளுக்கு பொங்கல் வைத்தல், அலகு குத்துதல், மொட்டை அடித்தல் போன்ற சடங்குகள் காலங்காலமாக செய்து வருகின்றனர். இதுமட்டுமின்றி மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்கு சம்பிரதாய நிகழ்வுகளும் நடந்து வண்ணமே இருக்கின்றன. இவை மனித வாழ்வியலோடு சார்ந்தும் இணைந்தும் மனிதன் தன் தேவைக்காக அமைத்துக்கொண்ட பண்புகள் ஆகும்.

மக்களின் கூட்டு வாழ்க்கை சமுதாயத்தின் ஒரு சாரமாகக் காணப்படுகிறது அதில் மனிதன் ஒரு அங்கமாக வாழ்கிறான். தன்னை சமூகத்திலிருந்து விலக்கிக் கொள்ளாமல்

வாழ்கின்றான். தான் வாழும் காலங்களில் சமூகத்தின் வாழ்வியல் நெறிகளையும் விதிமுறைகளையும் உணர்ந்து சூழலுக்கு ஏற்றாற்போல் தன் மனநிலையை மாற்றி அமைத்துக் கொள்ளவும் செய்கிறான். அதுவே, உண்மையான மனித அறிவாகும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"⁴ (குறள்.140)

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க மனிதன் தான் வாழும் காலம் வரையில் இந்த உலகத்தோடு இணைந்து வாழ்கிறான். இதன்வழி அவனின் சமுதாய சாரலும் தனி மனித பண்புகளையும் நாம் காணமுடிகிறது.

## நாட்டுப்புற பண்புகள்

பாமர மக்களின் மனதில் நாட்டுப்புற வடிவங்களை பதிய வைப்பதன் மூலம் எளிதில் அந்தந்த கலாச்சார வாழ்வியலோடு ஒன்றி வாழ்கின்றனர். எளிய வடிவங்கள், எளிய சொற்களோடு செறிவான ஆழ்ந்த கருத்துக்கள் இவையே சித்தர்களின் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து நிற்கின்றன. கலை, கலாச்சாரம், சிற்பம் வடித்தல் போன்றவையும் அவரவரின் திறமைக்கேற்ப தனிப்பண்புகளாகும். இவையே மனித ஆளுமையின் முக்கியக் காரணமாக அமைகிறது.

## நிறைவாக

மனிதனின் வாழ்வு முறையானது தமிழ் இலக்கியங்களில் பல ஆளுமைகளாகத் தோற்றம் பெற்று வருகின்றன. தனிமனிதப் பண்புகள் இயற்கை சார்ந்தும் பறவைகள் மற்றும் விலங்குகள் சார்ந்தும் கொண்டுள்ள நற்பண்புகள் போற்றுதற்குரியதாக உள்ளது. உயிர் வாழ்வியலுக்கான பயிர்த்தொழிலில் தென்படும் விவசாயப் புரட்சியைப் பார்க்க முடிகிறது. மேலும் அவ்வுழவுத்தொழிலில் கூட்டொழுவு சார்ந்த மனித இனக்குழுக்களை குறித்த பதிவுகள் வெளிப்படுகின்றன. அவ்வகையில் தனிமனிதனின் வீரம், வெற்றியின் அடையாளம் போன்றவை இயற்கையுடன் இணைந்தே இருந்திருக்கின்றன சமுதாய விழுமியங்களாகவும் நாட்டுப்புற மொழிகளாகவும் பண்பாட்டு நிலைக்களன்களாகவும் மனிதன் தன் தனித்த ஆளுமையைப் பதிவு செய்துள்ளான்.

## அடிக்குறிப்பு

1. கற்றலின் உளவியல் மற்றும் மனித வளர்ச்சி, ப.208
2. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி ஐஐ. ப.678
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா எண்.15
4. திருக்குறள்.140

## துணைநூற்பட்டியல்

1. ஆரோக்கியசாமி.எஸ் - கற்றலின் உளவியல் மற்றும் மனித வளர்ச்சி முத்துலட்சுமி பதிப்பகம், பாளையங்கோட்டை, மூன்றாவது பதிப்பு - ஜீன் 2009.
2. இளம்பூரணர் - தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - மே 2005.
3. கலாவதி.இர - சித்தர் பாடல்களில் நடப்பியல் காவ்யா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு - டிசம்பர் 2008.
4. தர்மன். சோ - சூல் அடையாளம் பதிப்பகம், திருச்சி, நான்காவது பதிப்பு - 2020.
5. வரதராசனார்.மு.வ - திருக்குறள் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, 175 வதுபதிப்பு - 2003.
6. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி II, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு - 1986.

# விழுமியங்களும் ஆளுமைகளும்

முனைவர் க.தனலட்சுமி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

ஆய்வுச் சுருக்கம்

மனித மனங்களைப் பண்படுத்துவதற்குப் பண்பாடுகளே அடிப்படையாக அமைகின்றன. உடல் வளமும் பலமும் எல்லாவற்றிற்கும் அடிப்படை. மனபலமே மனிதனின் பலம் ஆகும். இதுவே ஆளுமைகளுக்கு அடிப்படையாக அமைகின்றது. குடும்ப அமைப்பு ஒழுக்க நெறிகளின் உயர்வாலும் உறவாலும் செயல்படக்கூடியது.மனித இயக்கத்திற்கு சமுதாயமே அடிப்படையாகும் கலாச்சார மேம்பாடு ஆளுமை மேம்பாட்டிற்கு அடிப்படையாகும். ஏழைகளுக்கு உதவுவது ஆன்மீக ஆளுமைக்கு அடிப்படை.உலகப் பொதுமை ஆளுமையின் உயர்விற்கு அடிப்படையாக அமையும்.

முன்னுரை

மனித மனங்களைப் பண்படுத்துவதற்குப் பண்பாடுகளே அடிப்படையாக அமைகின்றன. பண்புள்ளவர்களாலேயே இந்த உலகம் இயங்குகின்றது. அதனால்தான் வள்ளுவர்,

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மண்" (குறள்.996)

என்று குறிப்பிடுகின்றார். இந்தப் பண்பாடுகள் இன்று விழுமியங்களாக, தனிமனிதன், குடும்பம், பணியிடம், சமுதாயம், தேசியம், உலகம் ஆகிய பல்வேறு நிலைகளில் தேவையாக உள்ளன. அவற்றைப்பற்றிய கல்வி இன்று மிகவும் முக்கியமானதாகும். இக்கல்வி ஆளுமை மேம்பாட்டிற்கு உறுதுணையாக அமையும்.

உடல் வளத்தைப் பேணுதல்

தனிமனிதனை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த உலகமே இயங்குகின்றது. தனிமனிதன் நல்ல பழக்கவழக்கங்களைப் பின்பற்றி ஒழுக்க நெறியோடு வாழ்ந்தால் குடும்பமும் தேசமும் உலகத்தை நோக்கி மேம்படும். அந்த வகையில் தனி மனித விழுமியங்களாக முதலில் பின்பற்றவேண்டியவை,

1. உடல் வளத்தைப் பேணுதல்
2. மன பலத்தைப் பெருக்குதல்

ஆகும். உடல் வளமும் பலமும்எல்லாவற்றுக்கும் அடிப்படை. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். அதனால் தான் திருமூலர்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"
(திருமந்திரம்.80)

என்று குறிப்பிடுகின்றார். மேலும் மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள், நமது உடலுக்குள்ளேயே நல்ல விதமான உணர்வுப்பூர்வ சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளாவிட்டால் வெற்றியடைந்த பிறகு அதை அனுபவித்து மகிழ்ச்சியடைய முடியாமல் போய்விடும் என்று இயங்குவதும் நினைவுகூறத்தக்கது.

உடல் வளத்தை பெருக்க,

1. மாமிச உணவுகளைத் தவிர்த்து இயற்கை சார்ந்த கீரை, பழங்கள் ஆகியவற்றை உண்ணுதல்
2. சர்க்கரை, இரத்த அழுத்தம் போன்றவற்றிலிருந்து காக்கக்கூடிய ராகி, கம்பு, சோளம், தினை, வரகு போன்ற நவதானியங்களை உண்ணல்

3. சமையல் கூடம், தண்ணீர் ஆகியவற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்ளல்

4. மண்பானையில் சமைத்தல்

5. நிறம் பார்த்து விரைவு உணவுகளை உண்ணாதிருத்தல்

6. நீர்மோர் மேலானது என உணர்தல்

7. தங்களுக்குத் தேவையான காய்கறிகளை மேல்மாடியில் இயற்கை உரமிட்டு விளைவித்தல்

ஆகிய உணவு முறைகளையும் வழிவகைகளையும் பின்பற்றலாம். சரிவிகித சத்தான உணவை உட்கொள்வது உடல் பலத்திற்கு மிகவும் அவசியமாகும். போதுமான அளவு ஓய்வும், உறக்கமும் மிகவும் தேவை. 15 நாட்களுக்கு ஒருமுறை விரதம் மேற்கொள்வது ஜீரண சக்திக்கும் ஜீரண உறுப்பிற்கும் மிகவும் நல்லதாகும். உடல்பலம் ஆளுமையின் அடிப்படையாகும்.

**மன பலத்தைப் பெருக்குதல்**

மனபலமே மனிதனின் பலம் ஆகும். மனபலத்திற்கு நம்முடைய எண்ணங்கள் அடிப்படையாக விளங்குகின்றன. அதனால்தான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனவளக்கலை பற்றிக் கூறுகையில்,

*"வேண்டியதற்குப் படிகட்டி வேண்டாததற்கு வடிகட்டும் எண்ணமே உள்மன அமைதிக்கு உரம்" (ப.30)*

என்று குறிப்பிட்டார். இந்த உலகத்தில் உள்ள அனைத்து சக்திகளை விட மனதால் விளையும் ஆத்மசக்திக்கே பலம் அதிகம். நமக்குத் தேவையான எல்லா பலமும் நம்மிடமே இருக்கின்றன. அதனால் தான் சுவாமி விவேகானந்தர் அவர்கள், உண்மை, தூய்மை ஆகியவை ஆற்றலை வளர்க்கும். உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இல்லை. உனக்குத் தேவையான எல்லா வலிமையும் ஆற்றலும் உனக்குள்ளேயே இருக்கின்றன' (சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள், ப.15) என்று குறிப்பிட்டார். இதனை உணர்ந்து செயல்பட்டால் நாம் மன பலத்தைப் பெற முடியும்.

**மாதா பிதா குரு தெய்வம்**

குடும்பம் என்ற அமைப்பு ஒழுக்கநெறிகளின் உயர்வாலும் உறவாலும் பிணைந்து செயல்படக்கூடியது ஆகும். இப்படிப்பட்ட குடும்பத்தில் முக்கியமான விழுமியங்களாக,

1. மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோர்களை மதித்து நடத்தல்

2. குடும்பத்தில் பொறுப்போடு செயல்படல்

ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தாயும் தந்தையும் குருவும் தெய்வத்துக்கு ஒப்பாவார்கள். இவர்களை என்றும் மறத்தல் கூடாது. அதனால்தான்,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"
- கொன்றை வேந்தன்

"மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்"
- உலகநீதி

"தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"
- அனுப்வ மொழி

என்று கூறப்படுகின்றன.வாழ்க்கையில்தியாகம் செய்பவர் தந்தை. ஆனால் வாழ்க்கையையே தியாகம் செய்பவள் தாய். அதனால்தான் மெக்ஸிகோ நகரத்தில் 'நாம் காணும் முன்பே நம்மை நேசிப்பவருக்காக' என்று தாய்க்காக நினைவுத்தூண் எழுப்பப்பட்டுள்ளது. மாணவர்களின் மன மாசுக்களை அகற்றுபவரே சிறந்த ஆசிரியராவார். நல்ல ஆசிரியர்கள் வாய்க்கப் பெற்றால் மாணவன் தொடக்கத்திலேயே பகுதி வெற்றி அடைந்ததாகப் பொருளாகும்.

தசரதனுக்கு இராமன் பிறந்த பொழுது தனக்கு மகன் பிறந்து விட்டான் என்ற மகிழ்ச்சி

அடையவில்லையாம். நல்ல ஆசிரியராகிய விசுவாமித்திரனுக்கு நல்ல மாணவன் கிடைத்துவிட்டால் என்று தசரதன் மகிழ்ச்சி அடைந்தாராம். இவை அனைத்திற்கும் மேலாக ஆன்மீகபலம் என்பது நம் அனைவருக்கும் தேவையாகும். நல்ல ஆளுமைக்குச் சிறந்த பெற்றோர்கள் அடித்தளமாக அமைவர்.

### குடும்பத்தின் பொறுப்போடு செயல்படல்

குடும்பத்தில் ஒவ்வொருவரும் நம்முடைய பொறுப்புக்களை உணர்ந்து செயல்படுதல் இன்று நாம் பின்பற்ற வேண்டிய விழுமியங்களின் மிகவும் முக்கியமாகும். இதுவே தனிமனித ஆளுமையை மேம்படுத்த உதவும். சிறிய செயல்பாடுகளில் கூட மிகப்பெரிய பொறுப்புணர்ச்சி அடங்கியுள்ளது. நாம் அணிந்திருக்கும் காலணிகளைச் சரியான இடத்தில் வைத்தல், இல்லத்தைத் தூய்மை செய்தல், காய்கறி வாங்குதல்,தன்னுடைய ஆடைகளைத் தானே துவைத்தல், வீட்டில் உள்ள செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல், முடிந்தால் தாய்க்குச் சமைப்பதற்கும், தங்கை தம்பிகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கும் உதவுதல், தந்தையின் பணிகளுக்கு உதவுதல் ஆகியவை பொறுப்போடு நடப்பதற்கான செயல்முறைகள் ஆகும். இச்செயல்முறைகளே ஒருவனை ஆளுமையாளனாக உயர்த்தும்.

### சமுதாயத்தின் அங்கமே மனிதன்

சமுதாயம் இல்லாமல் தனிமனிதனோ, தனிமனிதன் இல்லாமல் சமுதாயமோ தனித்து இயங்க முடியாது. ஆதலால் முக்கியமானசமுதாய விழுமியங்களாக,

1. சமுதாயத்தின் அங்கமே மனிதன் என்பதை அறிதல்
2. இந்திய சமுதாயம் விழுமியங்கள் நிறைந்தது என்பதை உணர்தல்

ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

தனி மனிதன் உணவு, உடை, இருப்பிடம், கல்வி ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குச் சமுதாயமே காரணமாகும். தனிமனிதன் என்றும் தனித்து இயங்க முடியாது. நம்முடைய அடையாளம் நம்முடைய சமுதாயமே ஆகும்.

### இந்திய சமுதாயமும் விழுமியங்களும்

நம்முடைய இந்திய சமுதாயத்திற்கு என்று தனியான விழுமியங்கள் இருக்கின்றன. இந்த விழுமியங்கள்தான்நம்மை உயர்த்துவதோடு நம் தேசத்தையும் உயர்த்துகின்றது.பெரியோர்களை மதித்தல், மனிதநேயம், தூய்மையான அன்பு, பொறுமை,ஈகை, விட்டுக்கொடுத்தல் ஆகியவை நம் சமுதாயம் நமக்குக் கற்றுக்கொடுத்த விழுமியங்கள் ஆகும்.

இவற்றைப்பின்பற்றி தனிமனிதன் நடக்கும்பொழுது சமுதாயம் சிறப்படையும். மனிதனைச் சமுதாயத்தின் அங்கமாக ஆக்குவதற்குச் சான்றோர்கள் உழைத்தனர். சில வேறுபாடுகளால் சமுதாயம் பின்தங்கி இருக்கின்றது.

> "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
> ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு"

என்பதை இம்மனித சமுதாயம் உணர்தல் வேண்டும். தனிமனித நலன் சமுதாய நலனுக்குள் அடங்கிக் கிடக்கிறது. சமுதாய நலன் தனிமனித நலனை அடிப்படையாகக் கொண்டது. தனிமனிதனும் சமுதாயமும் உடலும் உறுப்புமாக இணைக்கப்பட்டுள்ளனர். ஒன்றன் வளர்ச்சியே மற்றதன் மேம்பாடு ஆகும் என்பதைச் சுயநல மனிதர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

### இந்தியாவின் கலாச்சார மேன்மை

நம்முடைய தேசம் கலாச்சாரத்திற்கும் ஆன்மீகத்திற்கும் பெயர் பெற்ற தேசம். அதனால்தான் பாரதியார்,

> "பாரத நாடு பழம்பெரும் நாடு
> நீரதன் புதல்வன் இந்நினைவு அகற்றாதீர்"
> (பாரதியார் கவிதைகள் ப.20)

என்று குறிப்பிட்டார். இந்தியாவில் நாம் பின்பற்ற வேண்டிய தேசிய விழுமியங்களாக,

1. இந்தியாவின் கலாச்சார மேன்மை

2. இந்தியாவின் ஆன்மீகம்

ஆகியவற்றைக் குறிப்பிடலாம்."ஒருவனுக்கு ஒருத்தி' என்ற குடும்ப கலாச்சாரத்தைஇந்தியாதான் வெளியுலகிற்கு அடிப்படையாக்கியது. நம்முடைய இதிகாசங்கள் விலைமதிக்க முடியாதவை. அறம் வளர்த்த மன்னர்கள் நம்முடைய கலாச்சாரத்தைக் கட்டிக்காத்தனர். இந்தக் கலாச்சாரம் தான் ஆளுமைகளின் அடையாளமாகக் விளங்குகின்றது.

**இந்தியாவின் ஆன்மீகம்**

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்மிக நெறி நம்முடையது. மனிதனையே கடவுளாகக் கண்ட தரிசனம் நம்முடைய ஆன்மீகத்தின் அடிப்படை."ஊனும்பு ஆலயம்" என்று சொல்லி,

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்"**
**(திருமந்திரம், 35)**

என்று திருமூலர் கூறியதைப் போல அன்பையே கடவுளாகிய ஆன்மிகம் தான் இந்தியாவைப் புனிதமாக்கியது. கடவுள் மீது பாடப்பட்ட புராணங்களோடு தொண்டர்களை முன்னிறுத்திய சிறுதொண்டர் புராணம் தான் உண்மையான ஆன்மீகத்தை பறைசாற்றின.

**"படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயின்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயின்**
**படமா கோயில் பகவற்கு அதுதாமே"**
**(திருமந்திரம். 38)**

என்று ஏழைக்கு உதவுதலையே இறைவழிபாடு என்று நம்முடைய ஆன்மீகம் இயம்புகின்றது. இந்த ஆன்மிக அடையாளம் ஆளுமைகளின் அடையாளமாக மலரும்.

**உலக ஒற்றுமை**

நம்முடைய விழுமியங்கள் தமிழகத்தையும், இந்தியாவையும் முன்வைத்தது அல்ல. அவை உலகத்தையே நோக்கமாகக் கொண்டவை ஆகும். நம்முடைய உலகளாவிய விழுமியங்களுள்,

1. உலக ஒற்றுமை

2. உலகப் பொதுமை

ஆகியவற்றை முக்கியமான விழுமியங்களாகக் குறிப்பிடலாம்.

**"ஒருபிடி உணவில் உலக ஒற்றுமை கண்டுபிடி"** (மனவளக்கலை ப.12)

என்பார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் வேற்றுமையில் ஒற்றுமை தான் நம்முடைய பலமாகும் என்பது குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியவற்றால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து உலகளாவிய பொதுமைச் சிந்தனைகளை நம்முடைய விழுமியங்கள் முன்வைக்கின்றன.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

என்ற கணியன் பூங்குன்றனாரின் உலகளாவிய பொதுமைச் சிந்தனைஐக்கிய நாடுகளின் சபைகளிலும் எதிரொலிக்கின்றன. இவற்றையெல்லாம் உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.

**தொகுப்புரை**

- மனித மனங்களைப் பண்படுத்துவதற்குப் பண்பாடுகளே அடிப்படையாக அமைகின்றன.
- உடல் வளமும் பலமும் எல்லாவற்றிற்கும் அடிப்படை.

- மனவலிமே மனிதனின் பலம் ஆகும் இதுவே ஆளுமைகளுக்கு அடிப்படையாக அமைகின்றது.
- குடும்ப அமைப்பு ஒழுக்க நெறிகளின் உயர்வாலும் உறவாலும் செயல்படக்கூடியது.
- மனித இயக்கத்திற்கு சமுதாயமே அடிப்படையாகும்.
- கலாச்சார மேம்பாடு ஆளுமை மேம்பாட்டிற்கு அடிப்படையாகும்.
- ஏழைகளுக்கு உதவுவது ஆன்மீக ஆளுமைக்கு அடிப்படை.
- உலகப் பொதுமை ஆளுமையின் உயர்விற்கு அடிப்படையாக அமையும்.

**துணைநூற் பட்டியல்**


1. திருவள்ளுவர் - திருக்குறள்
2. திருமூலர் - திருமந்திரம்
3. வேதாத்திரி மகரிஷி - மனவளக்கலை
4. பாரதியார் - பாரதியார் கவிதைகள்
5. சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள


□□□

# பாலைத்திணைப் பாடல்களில் தோழியின் ஆளுமைத்திறன்

அ.நித்யா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம்கல்லூரி, பொள்ளாச்சி

**ஆய்வுச்சுருக்கம்**

தோழி அக இலக்கிய முக்கோண வடிவத்தின் மேல் முனையாக விளங்குபவள். அதாவது தலைவனையும் தலைவியையும் இணைக்கும் புள்ளியாகவும் தலைவன் தலைவிஎன்ற இரு புனைவுபாத்திரங்களை இணைக்கும் மையமாகவும் இருக்கிறாள். குறிப்பாக உடன் போக்கில் தோழியினுடைய பங்கு மிகமுக்கியமானதாகக் கருதப்படுகிறது. உடன்போக்கில் தோழிதலைவியிடம் கூறும் கூற்றாக அமைந்தபாடல்கள் அனைத்தும் தோழியின் செயலை, புத்திக் கூர்மையைமதிநுட்பத்தை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்துகின்றன. தலைவியின் செயல்கள் அனைத்திற்கும் துணையாய் நிற்பவள் தோழியாவாள். எனவேஉடன்போக்கில் அவளுடையபங்கே சங்க இலக்கியத்தில் புலவர்களால் பாடுபொருளாக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைஉடன்போக்கில் அமைந்த பாலைத்திணைப் பாடல்களில் அமைந்ததோழியின் ஆளுமைத்திறனைத் ஆய்வதாக இடம்பெற்றுள்ளது.

**முன்னுரை**

தோழி,செவிலியின் மகளாக இருக்கிறாள். அவள் மரபின் வழி நற்றாயைஅடுத்திருக்கும் செவிலியைப் போல எப்போதும் தலைவியின் அருகிலேயே இருக்கிறாள். ஆகவேஅவளின் சிந்தையும் செயலும் தலைவியையே எஞ்ஞான்றும் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. பூக்கொய்தல், புனலாடல், புனம் காத்தல் முதலான சூழ்நிலைச் செயல்களின் போதும் அவள் தலைவிக்குத் துணையாகநிற்கிறாள். எனவே, இதன் தொடர்பாக அவளுடைய ஆளுமை தலைவியின் சார்பாய் அமைந்தஉடல் உள்ள இயல்புகள், போக்கு, நடத்தை ஆகியவற்றின் அடிப்படையில் இக்கட்டுரை ஆராய்வதாக அமைந்துள்ளது.

**பாலைத்திணை**

தொல்காப்பியர் குறிப்பிட்ட"முதல், கரு, உரிப்பொருள்" களில் முதற்பொருள்களாகத் திணை (நிலம்), பொழுது (காலம்) சுட்டியுள்ளார் .அதனைச்சான்றோர்கள் நிலங்களைநானிலம் என்றனர் இதனை,

"முல்லைகுறிஞ்சிமருதம் நெய்தல்"(1)

என்ற நூற்பாஎடுத்துரைக்கின்றது.

பாலைஎன்பதுபால்மரம். அது மழையற்று வறண்ட நிலத்தும் வளர்வது அதனால் அப்பெயரால் பாலைநிலம் வழங்கப்பட்டது. மலையும் காடும் வளமற்று வறண்டநிலையில் அதனைப் பாலையாகக் கொள்வது தமிழக வழக்கமாயிற்று.

பழமைவாய்ந்ததமிழ் நிலப்பரப்பில் பாலைஎனும் நிலம் தனித்து இல்லை,குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்ததேபாலை நிலமாகும்.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்துநடுங்குதுயர் உறுத்துப்
பாலைஎன்பதோர் படிவம் கொள்ளும்."(2)

என்னும் வரிகள் பாலைநிலத்திற்கு இளங்கோவடிகள் இலக்கணம் வகுத்துள்ளார்.

முல்லை, குறிஞ்சி ஆகிய நிலத்தில் மழைப்பொழிவு குறைந்ததால் அந்நிலங்கள்

பாலையாக உருவமாற்றம் கொள்ளும். பாலைத்திணைக்கு முதன் முதலாக நிலத்தை சுட்டுவது 'சிலப்பதிகாரமே' ஆனால் தொல்காப்பியர் பாலைத்திணையை 'நடுவண்' என்றசொல்லால் குறிப்பிடுகிறார்.

"நடுவண் ஐந்திணைநடுவணதுஒழியப்
படுதிரைவையம் பாத்தியபண்பே." (3)

நடுநிலைத் திணைக்கு சிறுபொழுதாக நண்பகலையும் பெரும்பொழுதாக இளவேனில், முதுவேனில் மற்றும் பின்பனிகாலத்தையும் சுட்டுகிறார். சான்றாக,

"நடுவுநிலைத் திணையேநண்பகல் வேனிலொடு
முடிவுநிலைமருங்கின் முன்னியநெறித்தே." (4)

"பின்பனிதானும் உரித்தெனமொழிப." (5)

மேற்கண்டசெய்திகள் பாலைத்திணையில் அமைந்துள்ளன.

**ஆளுமையின் விளக்கங்கள்**

"ஆளுமை"ஒருநபர் மூலம் செயலாற்றும் திறனும் பண்புகளின் ஒழுங்கமைக்கப்பட்ட தொகுப்பாக, பல்வேறு சூழ்நிலைகளில் தங்கள் சூழல்கள், அறிவுத்திறன், உணர்ச்சிகள், ஊக்கங்கள், நடத்தை அறிவியல்கள் என்பவற்றால் செல்வாக்குச் செலுத்துகிறது. "ஆளுமை" என்பதற்கான ஆங்கிலப் பதமான "personality" என்பது இலத்தீன் சொல்லானபேர் சொனா (persona) என்பதிலிருந்து உருவானது. மூல இலத்தீன் சொல் முகமூடி என்ற பொருளைக் கொண்டது. (6)

தனி மனிதனுடைய எண்ணங்கள், செயற்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள் அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகியயாவும் சேர்ந்ததொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒருதனித்தன்மை ஆளுமை எனப்படும். அவனுடைய உடல் தோற்றமும் அவன் உடைப்பாணியும் நடையும் அவனிடம் காணப்படும் அன்பு, பொறாமை, ஊக்கம்,அச்சம், இரக்கம், நன்றியுணர்வு,தந்திரம் போன்ற பலவிதமான பண்புகளும் அடைவுடைய ஆளுமையில் அடங்கும் (7)

இதிலிருந்து ஆளுமை என்பது தன்னைத் தானே ஆள்வதும் பிறரை ஆளும் வல்லமையையும் முகமூடி மாதிரி இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப அமைகின்றது.

**தோழியின் ஆளுமைத் திறன்**

தலைவியின் கற்பும் நாணமும் நேர்கோட்டில் நகரதுணைபுரிபவள் தோழியாவாள். தலைவனின் பண்பையும் அறிவையும் ஆராய்ந்து தலைவிக்கும் செவிலிக்கும் தெரிவிப்பவள் எனபன் முகத்திறமை கொண்டு தலைவியின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் தலைவி தலைவனோடு உடன்போக்குச் செல்லபெரிதும் துணை புரிபவளாகவும் தோழி விளங்குகின்றாள்.

உடன்போக்குச் செல்லநினைக்கும் தலைவனைத் தோழிதடுத்துத் தலைவனிடம் மணவினைக்குத் தயாராகத் தூண்டுவதாக அமைந்தபாடலொன்றில்,

"விளம்பழம் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசம் தின்றதேய் கால் மத்தம்
..............................................
தன் வரைத்துஅன்றியும் கலுழ்ந்தனகண்ணே"
(8)

என்ற நற்றிணைப் பாடலில் உடன்போக்குச் செல்வதால் தன் காலில் அணிந்திருக்கும் பருக்கைக் கற்கள் உள்ளசிலம்பையும் வரிகளையுடையபந்தையும் ஓரிடத்தில் வைக்கச் சென்றாள். அப்போது இவற்றைக் காணும்தோறும் தன் தோழிகள் மனம் நோவர், அவர்கள் மிகவும் இரங்கத் தக்கவர்கள் என்றுதலைவிதன் உள்ளத்தில் நினைத்து அளவுக்கு அதிகமாகக் கண்ணீர் சிந்தினாள். அதனால் உமக்கு ஏற்றவாறு செயலாற்றுக என்று தோழி தலைவனிடம் உழைப்பதன் மூலம் தலைவனிடம் குறிப்பாக

உடன்போக்கை மறுத்து கூறுகிறாள். இதிலிருந்து தோழி தலைவனிடம் எதிர்த்துப் பேசும் தனித்தன்மையை அறிய முடிகிறது.

**தலைவிஉடன்போக்கில் ஆர்வம் கொண்டதை தலைவனிடம் கூறும் விதம்**

தோழிதலைவனிடம் தலைவி உடன்போக்கில் ஆர்வம் கொண்டமையைக் கூறும் பாடலொன்றில்,

"நல்நெடுங் கதுப்பொடுபெருந்தோள் நீவி" (9)

தலைவனிடம் தோழி, நீதலைவியோடு அவளதுநீண்ட கூந்தலையும் பெரியதோளையும் வருடி மகிழ்வித்து அளவளாவிச் செல்லலாம். நீபிரிவதால் நாங்கள் இங்கிருந்து துன்புறுவதை எண்ணி அஞ்சுகிறேன். ஆனால் தலைவி ஒருபடிமேல் சென்று உன்னோடு புறப்பட்டு வருவதற்கு மிகுதியான ஆர்வம் காட்டுகிறாள் என்கிறாள்.

மற்றொரு பாடலில் தோழிதலைவனிடம் உடன்போக்குச் செல்லும் வழி கொடியதாக இருக்கும் எனக் கூறிதலைவியைவரவேண்டாம் என்கிறாய், அப்படியாயின் தலைவிக்கு நீயில்லாமல் இருக்கும் மனைமட்டும் இன்பம் தருமோ என்று கேட்கிறாள் இவ்வாறு அமைந்தகுறுந்தொகைப் பாடலொன்றில்,

"உமணர் சேர்ந்துகழிந்தமருங்கின் அகன்தலை
ஊழ்பாழ்த் தன்னஓமைஆம் பெருங்காடு
இன்னாஎன்றீர் ஆயின்
இனியவோபெருமதமியோர்க்குமனையே."
(10)

தலைவனே! நீ பெரியபாலை நிலங்கள் இன்னாமையுடையன என்று கூறிதலைவியை விடுத்துத் தனியேசெல்லக் கருதினால் தலைவனைப் பிரிந்த தனிமையையுடைய மகளிருக்கு வீடு மட்டும் இனிமைதருமோ? எனக் கேட்கிறாள். இதில் தோழியின் கேள்வித்தன்மை வெளிப்படுகின்றது.

மற்றொருபாடலில் தலைமகள் தன்னையும் உடன்கொண்டு செல்லுமாறு தலைவனை வேண்டிய பொழுதுசுரத்தருமை கூறி மறுத்துத்தான் தனியாகச் செல்வதாகக் கூறும் தலைவனிடம் தோழிஉடன் போக்கை வற்புறுத்துவதாக அமைந்தபாடலில்,

"களிறுபிடிதழீஇப் பிறபுலம் படராது
பசிதினவருந்தும் பைதுஅறுகுன்றத்து
சுடர்த்தொடிக் குறுமகள் இணைய
எனைப் பயம் செய்யுமோ - விடலைநின்
செலவே." (11)

யானைகள் கோடைவெப்பத்தாலும், உணவு கிடைக்காததாலும் அதனைப் பெறுதற்பொருட்டு வேற்று நிலப்பகுதிகளுக்குப் போகாமல் கடும்பசிவாட்டவருந்திக் கிடக்கும் என்றுதோழி கூறுதலால் தலைவனும் பொருளுக்காகப் பிறநாடு செல்லாமல் தன் காதலியோடு உடன் உறையவேண்டும் எனவிருப்பம் கொள்வது தெரிகிறது. பசுமையற்ற குன்றம் கடந்து தலைவி அழுதுபுலம்பு மாறுவிட்டுச் செல்லும் உனக்குச் செலவு என்ன பயனைத் தரும்? என்று தோழி தலைவனிடம் கேட்கிறாள்.

"சொல்லும் செயலும் எப்பொழுதும் ஒன்றிருப்பதில்லை. ஆனால் தோழிசொல்லின் செல்வியாகவும் இருக்கிறாள. செயலில் வல்லவளாகவும் விளங்குகிறாள். இந்நிலையிலும் பெருமைவாய்ந்த ஓரேபாத்திரம் தோழியே" (12)

இதிலிருந்து தோழி அறிவுநிலையில் நின்று செயல்படுத்துவதும்,எல்லோரையும் இயக்குவதால் அவளது தலைமைப்பண்பும் நமக்குப்புலனாகிறது.

**தொகுப்புரை**

தலைவியின் கற்பும் நாணமும் நேர்கோட்டில் நகரத் துணைபுரிபவள் தோழியாவாள். தலைவன் தலைவி இருவரையும் அடுத்து முதன்மை மாந்தராக திகழ்பவள்.

தலைமக்களிடையேயுள்ள அன்பினைப் புரிந்துகொண்டு அவ்வன்பிற்குத் தடை ஏற்படும் போது தன்னுடைய சொல்லாடல் திறத்தாலும் மதிநுட்பத்தாலும் களவை கற்பாக்கிக்காட்டும் வன்மை பொருந்தியவளாகத் தோழி விளங்குகின்றாள்.

தலைவன் களவுநீட்டித்தநிலையில் களவினைஊரார் அறிந்ததனால் தலைவனுக்கு வருத்தத்தைக் கூறிதோழிவரைவுகடாவுகிறாள். உடன் போக்கிற்குத் தலைவன் ஆற்றுப்படுத்தியும், உடன் போகதலைவி மறுத்தவிடத்து அவளுக்கு எடுத்துக்கூறியும் உடன்போக்கில் கூற்று நிகழ்த்துகிறாள் தோழி. உடன்போக்கில் தலைவனுக்கும் தலைவிக்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுவதோடு உடன்போக்கினை வெற்றிகரமாக முடிப்பவள் தோழியாவாள்.

### அடிக்குறிப்புக்கள்

1. தொல்.அகம்.நூ.5
2. சிலம்பு.காடுகாண்.காதை. 64 -66
3. தொல்.அகம்.நூ.2
4. மேலது.11
5. மேலது.12
6. ta.m.wikipedia.org
7. வாழ்வியல் களஞ்சியம் ப.678
8. நற்.பா.12
9. அகம்.பா.283
10. குறு.பா.124
11. ஐங்.பா.305
12. சங்க இலக்கியத்தில் தோழி ப.12

### துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணனார்., - தொல்காப்பியம் (பொருள்),(உ.ஆ).,சாரதாபதிப்பகம், சென்னை.600014, மு.ப.மே.2005.

2. வேங்கடசாமிநாட்டார்.ந.மு., - சிலப்பதிகாரம், (உ.ஆ) ராமையாபதிப்பகம், சென்னை - 600 014. 9.ஆம்.ப.2018.

3. பாலசுப்பிரமணியன்.கு.வே., - நற்றிணை, (உ.ஆ) நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600098, மு.ப.ஏப்ரல்.2004.

4. நாகராசன்.வி., - குறுந்தொகை,(உ.ஆ) நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600098, மு.ப.ஏப்ரல்.2004.

5. செயபால்.இரா.,-அகநானூறு, (உ.ஆ) நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600098, மு.ப.ஏப்ரல்.2004.

6. தட்சிணாமூர்த்தி.அ.,- ஐங்குறுநூறு, (உ.ஆ) நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட், சென்னை-600098, மு.ப.ஏப்ரல்.2004.

7. சரளா இராசகோபாலன், - சங்க இலக்கியத்தில் தோழி, ஒளிப்பதிப்பகம், 63,ரங்காச்சாரிசாலை, சென்னை, மு.ப.டிசம்பர்.1986.

7. சண்முகம்பிள்ளை,மு. - வாழ்வியல் களஞ்சியம் (தொகுதி 2) (தொ.ஆ.) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மு.ப.1986.

□□□

# ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் கருத்தாளுமை

ர. பாலதாரணி
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ந.க.ம.கல்லூரி, பொள்ளாச்சி.

முனைவர் க.தனலட்சுமி
நெறியாளர், தமிழ் உதவிப்பேராசியர்,
ந.க.ம.கல்லூரி, பொள்ளாச்சி.

ஆய்வுச்சுருக்கம்

ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் கருத்தாளுமையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது. அரசியலில் அரசியல் வாதிகள் ஊழல் செய்வதையும், மக்களின் பணத்தை கொள்ளை அடிப்பதையும் சிறுகதைகள் கூறுகின்றன. வறுமையினால் பணத்தின் தேவையும், பசிக்கொடுமையும் ஏற்படுகின்றன. கல்வி என்பது பெண்களுக்கு முக்கியம் என்பதையும் படிக்கும் வயதில் தவறான வழியில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். விதவைகளின் நிலையினையும், பெண் வயதாகியும் திருமணமாகாமல் இருக்கும் நிலையையும் கூறப்பட்டுள்ளன. முதியோர் நிலை சமூகச் சிக்கலாக அமைந்துள்ளது.

## முன்னுரை

எழுத்தாளர்களில் ஆண்டாள் பிரியதர்ஷினி வித்யாசமான கதைகளை அமைப்பதை தனது முயற்சியாகக் கொண்டுள்ளார். கவிஞர் மட்டுமல்லாமல் பல பரிமாணங்களின் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். இவரின் எழுத்து நடையானது இவருக்கே உரிய பாணியில் அமைந்துள்ளது. பெண்ணியக் கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார். பெண்கள் பற்றியே அதிகமாக கதைகள் அமைக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களின் சிறுகதைகளில் காணப்படும் கருத்தாளுமை குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## ஆளுமை

ஆளுமை என்பது 'ஆற்றல்' என்று மெய்யப்பன் தமிழ் அகராதியும் (மெ.த.அ,ப.116)[1], 'ஆளுமையானது ஒரு மனிதனின் தனிப்பட்ட குணத்தொகுப்பு முரட்டுத்தனமும் ஆளுமையின் வெளிப்பாடுதான் இதுவே நிலத்தின் ஆளுமை என்று பொருளும், அரசனிடமிருந்து சிறு ஜமீன்களுக்கும் சென்றது' (ப.85)[2] என்று க்ரியாவின் தற்காத் தமிழ் அகராதியும் என்று விளக்கம் தருகின்றன.

## கருத்தாளுமை

ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் சமுதாயச் சிந்தனை சார்ந்த சிறுகதைகளை எழுதுவதில் வல்லவர். அந்த வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களின் சிறுகதைகள்,

1. அரசியல் ஊழல்
2. வறுமை
3. பெண்கல்வி
4. முதிர்கன்னி நிலை
5. விதவை நிலை
6. முதியோர் நிலை

ஆகிய கருத்தாளுமைகளைக் கொண்டு விளக்குகின்றன.

## அரசியல் ஊழல்

ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்கள் தன்னுடைய சிறுகதைகளில், மக்களை ஏமாற்றுவதற்காக சாலை வசதிகள் செய்கிறேன்

என்று அரசியல் வாதிகள் ஊழல் செய்கின்றார்கள் என்று 'பெருமூச்சின் நீளம்' என்ற கதைகளில் கூறியிருக்கிறார். இக்கதை தற்கால அரசியில் நிலையினை எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது. அரசியல் களம் ஒருவரை விட ஒருவர் முன்னிலையில் இருக்க வேண்டும் என்று நினைப்பதை அறியமுடிகின்றது. முன்னால் எம்.எல்.ஏ. மந்திரியின் அரசியல் விழாவிற்கு போகவா வேண்டாமா என்று தன்னைத் தானேக் கேட்டுக் கொள்கிறார். அரசியல்தான் ஐஸ்வரியம் பொழியும் தனபூமி என்றும், வாக்களித்த மக்களின் கண் துடைப்பிற்காக சாலை வசதிகள், பள்ளிக்கூடம், தண்ணீர்த்தொட்டி, ஆகியவற்றை ஏற்படுத்துவதும், ஊழல் வழக்கு எல்லாம் அரசியலில் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும், ஊழல் செய்வதால் வெற்றி பெறாமல் அரசியல் வாதி சென்றுவிடுகின்றார். மறுமுறை தேர்தலில் நின்றாலும், அதை மக்கள் மறந்து விடுவார்கள் என்ற நிலையினை இக்கதையின் மூலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

'ஊழல் வழக்கெல்லாம் அரசியலானை ஒன்றும் செய்ய முடியாது. 1000 ரூபாய் நோட்டு மட்டும்தான், அடையாளம் தெரியக்கூடிய தனலட்சமி குடியிருப்பு "எங்கள் தொழில்" (ஆ.பி.சி,ப.72)[3] என்று கூறுவதாக இக்கதை அமைந்துள்ளது.

அரசியலில் உறுப்பினர்கள் நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களால் பணம் விழுங்கும் முதலைகளாகச் செயல்படுகின்றனர். இதனை வைரமுத்துவின்,

'வலையில் மாட்டிய மீனும் அரசியல்
வாதியிடம் மாட்டிய பணமும் ஒன்றுதான்,
சிக்கினால் மீளாது.'

(ஆ.நம்.சீனிவாசன் தொ.ஆ, வைரமுத்து ஆய்வுகளஞ்சியம் 2,ப.70)[4]

என்ற கவிதை வரிகளின் மூலம் அறிய முடிகின்றது.

வறுமை

ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் வறுமை நிலை என்பது ஒவ்வொரு குடும்பத்திலும் வேறுபட்டதாக அமைந்ததை அறியமுடிகிறது. அன்றாட வாழ்க்கையில் உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை வேண்டும் அவற்றில் ஒன்றான இருப்பிடத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.

மழையில் நனைந்த பொறையை நாய்க்குப் போட்டான் கதிர். அந்த நாய் அதைச் சாப்பிடவில்லை. மழையினால் இருக்க இடம் இன்றி கடை வாசலில் நிற்க போகும் போது கதிரை காவலாளி விரட்டி விடுகிறான். மழையில் நனைந்ததால் குழந்தையான சின்னிக்கு காய்ச்சல் அதிகமாக இருந்தது. மழைக்காலத்தினால் வீட்டுக் கட்டுமான வேலைகள் நின்று போனது. கதிருக்கு வேலை இல்லாததால் கூலி இல்லை. இதனால் வறுமை ஏற்படுகிறது. வீடு கட்டும் தொழிலில் வரும் வருமானத்தை வைத்துதான் வீட்டில் உள்ள அனைத்து செலவுகளையும் சமாளிக்க வேண்டும். இத்தனை வறுமையிலும் குழந்தையைப் படிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணமும், நகை வாங்க வேண்டும் என்றும், பிளாட்பாரத் தளத்தில் வீடு இல்லாமல் நல்ல வீட்டிலே இருக்க வேண்டும் என்ற நினைப்பும் உள்ளன. அப்போது ஓட்டு கேட்டு தலைவர் வந்தார். முன்னைப் போல இல்லாமல் பணக்காரத் தோரணையுடன் இருந்தார். அப்போது மழைவர தலைவரின் வண்டியானது வேகமாகச் சென்றது. இதன் மூலம் சாலையோரத்தில் வசிக்கும் மக்களின் நிலையை அறியமுடிகின்றது.

'அன்றைக்கு மெலிந்து போய் இருந்தவருக்கு இன்றைக்குப் பணக்கார தோரணையும் மினுமினுப்புமாய்ப் பெரிய மனுஷக் களை வந்திருப்பதாய்த் தோன்றியது' (ஆ.பி.சி,ப.92)[5] என்பதன் மூலம் ஏழை மீண்டும் மீண்டும் ஏழையாகவே இருக்கிறான். பணக்காரன் பணத்தைச் சேர்த்து கொண்டே போகின்றான் என்ற நிலையை இக்கதையின் மூலம் அறியமுடிகின்றது. இதைப் பற்றி பாரதிதாசன் கூறுகையில்,

'பொதுமையிலே கிடைத்திட்ட
செல்வாக்கை இனநலத்துக்
காக்குவோரை'
(பாரதிதாசன், தமிழியக்கம்,ப.17)[6]

என்ற வரிகளின் மூலம் அரசியல் வாதிகள் மேலும் மேலும் பணத்தைச் சேர்த்து கொண்டுக் போவதை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. நடைப்பாதையில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையைக் கூறும்பொழுது,

நடைபாதை ஓரத்தில்
உடுத்தத் துணியில்லா
ஒரு கோடிச் சோதரியர்....
ஓராடை மட்டுந்தான்
உடுத்துகின்றாரே!"
(நம்.சீனிவாசன்,தொ.ஆ.வைரமுத்து ஆய்வு களஞ்சியம் 2, ப.832)[7]

என்ற வரிகளின் மூலம் நடைப்பாதை மக்களின் நிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பெண்கல்வி

ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில், பெண்கள் படிக்கும் வயதில் கல்விதான் முக்கியம் என்பதை 'தாய்ப்பால் கூலி' என்ற கதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ராஜம், ருக்மணி வீட்டில் சமையல் வேலை செய்கிறாள் ராஜம் மகள் ராதா காதல் செய்வதால் படிக்க விருப்பம் இல்லாமல் இருக்கின்றாள். ராதா நடவடிக்கையில் மாற்றம் கண்ட தாய், தனது மகள் படிக்காமல் வேறு வழியிலே செல்கிறாள் என்பதை அறிந்து மன வருத்தம் அடைகின்றாள். மகளுக்கு அறிவுரை சொல்லியும் அவள் எதையுமே காதில் போட்டுக் கொள்ளவில்லை. தனது மகள் தவறான வழியில் செல்வதைத் தடுக்க நினைத்த தாய், இத்தனை வருடங்களாய் தனது மனதில் உள்ள ஒரு உண்மையை ராதாவிடம் சொல்கின்றாள். அது என்னவென்றால் நானும் படிக்கும் வயதில் தாய், தந்தை பேச்சைக் கேட்காமல் ஒருத்தன் பின்னாடி ஊரை விட்டு ஓடி வந்தேன். அவன் என்னை ஏமாற்றி ஓடிச் சென்றான். அதன் விளைவு உனக்கு வரக்கூடாது. படிக்கும் வயதில் படிப்பு, வேலைதான் முக்கியம் என்று தாய் கூறுவதைக் கேட்ட ராதா இனி நான் ஒழுங்காகப் படிப்பேன் என்று கூறுவதாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது.

'கானல் நீரை அருவித் தண்ணின்னு
நம்பாதே.... ஒவ்வொண்ணுக்கும் ஒரு
பருவம் இருக்கு... இது படிக்க.. வேலை
தேடிக்க" (ஆ.பி.சி,ப.638)[8]

என்ற வரிகள் மூலம் பெண்கள் வாழ்க்கைக்குக் கல்வி முக்கியம் என்பதை எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இதனை,

'இளமையிற் கல்" (துரை. தண்டபாணி,
நீதி நூல்கள்,ப.7)[9]

என்ற ஆத்திசூடி வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

முதிர்கன்னி நிலை

முதிர்கன்னியாக இருக்கும் பெண் ஊசியின் மூலம் கருவைத் தனது உடலில் செலுத்தும் நிலையினை, 'தோஷம்' என்ற கதையில் கூறப்பட்டுள்ளது. கல்யாணலட்சுமி என்ற பெண் தனக்குத் திருமணம் ஆகாமல் இருப்பதினால், கடைசி வரையில் தனியாகவே திருமணம் ஆகாமல் இருந்து விடுவோமே என்று நினைக்கின்றாள். கல்யாணலட்சுமி வேலை செய்யும் இடத்தில் மற்ற பெண்கள் திருமணம் முடிந்து வருவதைக் கண்டு மன வருத்தம் அடைகின்றாள். ஊசியின் மூலம் கருவைச் செலுத்த மருத்துவரைத் தேடிச் சென்றாள். ஊசியினால் கருவைச் செலுத்துவதினால் சமூகப் பிரச்சினை ஏற்படும் என்று மருத்துவர் கூறும்பொழுது, இதுவரையில் என்னைத் துரத்தாத சமூகப்பிரச்சனையா? என்று கல்யாணலட்சுமி கருவைத் தனது உடலில் செலுத்தினாள். இதை அறிந்த தாய் வருத்தம் அடைந்தாள். தாய், தந்தை எல்லாமே என் குழந்தைக்கு நான் தான் என்றாள்

கல்யாணலட்சுமி இதன்மூலம் முதிர்கன்னி என்பது சமுதாயத்தில் உள்ள கொடிய நிலையினை எடுத்துக்காட்டுகின்றது.

'அம்மா, அப்பா என்று இரண்டு முகம்
கொண்ட புது அம்மன் நான்" (ஆ.பி.சி,ப.363)[10]

என்ற வரிகளின் மூலம் முதிர்கன்னி நிலை கூறப்பட்டுள்ளது. இதனை,

"தன் பெயரை
கல்யாணப் பத்திரிக்கையிலேனும்
அச்சில் பார்க்க
அவள் ஆசைப்பட்டாள்
ஆனால்
அச்சு எந்திரங்களைப் போலவே
மனித எந்திரங்களும்
மனககள் இல்லை."

(வை.ஆ.க.2,பக்.254-255)[11]

என்ற வரிகளின் மூலம் பெண் திருமணம் ஆகாமல் இருக்கும் நிலையினை அறியமுடிகின்றது.

**விதவை நிலை**

கணவன் இறந்த பிறகு பெண்ணின் விதவை நிலையைப் பற்றி, 'நதியைக் கைது பண்ண' என்ற கதையில் கூறப்பட்டுள்ளது. பேருந்தில் இருந்து சரஸ்வதி இறங்கினாள். தீபாவளி பண்டிகை வருவதால் தனது குழந்தைகளின் ஆசையை நிறைவேற்ற இனிப்பு, ஆடை என எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு வீதியில் சரஸ்வதி நடந்து சென்றாள். கணவன் இறந்து விட்டான். இனி எல்லாம் இவள் விருப்பப்படிதான். ஒரு மாதம் கூட ஆகவில்லை அதற்குள்ளாக தீபாவளி பண்டிகை கொண்டாட வேண்டுமா என்பதாக அருகில் இருப்பவரின் உரையானது அமைந்தது. இதை விட பெரிய நிகழ்வு என்னவென்றால் கணவனின் தாய் தன் மகன் வாழ வேண்டிய வயதில் இறந்து விட்டானே என்ற நினைப்பு இல்லாமல், என் மகன் அவன் விருப்பப்படி உன்னைத் திருமணம் செய்தான். அதனால் தான் அவன் இறந்து விட்டான். இந்தா பாயாசம் சாப்பிடு என்று, சரஸ்வதி மறுக்க மறுக்க கணவனின் தாய் வாயில் திணித்தது தான் சரஸ்வதி நினைவிற்கு வந்தது. தனது தந்தை இறந்தது கூடத் தெரியாமல் விளையாட்டுத் தனமாக இருக்கும் இரண்டு பிஞ்சு குழந்தைகளை நினைத்து சரஸ்வதி மனவருத்தம் அடைந்தாள். தந்தை படத்திற்கு முன்பாக தீபாவளி அன்று வாங்கி வந்த இனிப்பை வைத்து சாமி கும்பிட்டார்கள். அதன் பிறகு அதை சரஸ்வதியும், இரண்டு குழந்தைகளும் சாப்பிட்டார்கள். இதன் மூலம் விதவை நிலையினைப் பற்றி அறியலாம்.

'அப்பா சாப்பாடாச்சு.. இந்தாம்மா... ஆ
காட்டு' (ஆ.பி.சி,ப.135)[12]

இதனை,

'முன்னொரு பிராயத்தில்....
பூக்களின்
அணிவகுப்பு மரியாதையைத்
தன் கூந்தலில்
ஏற்றுக் கொண்டாள்
இன்றும் தான் சூடுகிறாள்
இது
தான்
விதவையல்ல என்று
வெளிக்காட்ட மட்டுந்தான்'

(வை.ஆ.க.2,ப.255-256)[13]

என்ற வரிகளின் மூலம் விதவை நிலையை அறியமுடிகின்றது.

**முதியோர் நிலை**

முதியோர் நிலை பற்றி 'அவரும் அதுவும்' என்ற கதையின் மூலம் கூறப்பட்டுள்ளது. கண் அறுவைச் சிகிச்சை செய்து தனது வீட்டில் தாத்தா இருக்கின்றார். அவர் கண்ணுக்கு மருந்து ஊற்றவும், அவருடன் உரையாடவும் வீட்டில் இருப்பவர்கள் யாரும் முன்வரவில்லை. தாத்தா அன்புடன் பேரன், பேத்தியிடம் உரையாடினால் அது அவர்களை எரிச்சல் அடையச் செய்தது. தாத்தாவின் மனைவி இறந்த பிறகு அவர்

உரையாட வீட்டின் சுவர் மட்டுமே துணையாக இருக்கின்றது. மருமகளுக்கு, மாமனார் வீட்டில் இருப்பது பிடிக்கவில்லை. முதியோர் இல்லத்தில் விட்டு விடும்படி மருமகள் கூறுகின்றாள். அதைக்கேட்ட தாத்தாவின் மகனும் முதியோர் இல்லத்தில் விடத் தயாரானான். இதை நினைத்த தாத்தா தன் கையில் இருந்த தடியைத் தூக்கி எறிந்தார். அவரது உயிரும் உடலை விட்டுப் பிரிந்தது. இதன்மூலம் முதியோர் நிலை பற்றி அறியமுடிகின்றது.

'சப்தத்துடன் ஆய்ந்து ஓய்ந்து அடங்கியது
அதுவும், அவரும்' (ஆ.பி.சி,ப.230)"[14]

என்ற வரிகளின் மூலம் முதியோர் குடும்பத்துடன் உரையாட நினைப்பதும், அதை அவர்கள் வெறுப்பதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள் சமூகப் பிரச்சினைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. சமூகப் பிரச்சனைகளான தற்கால அரசியல், வறுமை திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்ணின் நிலை, சமூகத்தில் உள்ள விதவை நிலை பெண்களின் வாழ்க்கையில் கல்வியின் முக்கியத்துவம், குடும்பத்தில் முதியோரின் மனநிலை ஆகியவற்றை எடுத்துக் கூறி அமைந்துள்ளன.

## தொகுப்புரை

- ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளின் கருத்தாளுமையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.
- அரசியல் ஊழலில் அரசியல் வாதிகள் மக்களின் பணத்தைக் கொள்ளை அடிக்கின்றனர்.
- வறுமையினால் பசிக்கொடுமையும், பணத்தின் தேவையும் ஏற்படுகின்றன. கல்வி என்பது பெண்களுக்கு முக்கியம் என்பதையும் பெண் படிக்கும் வயதில் தவறான வழியில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.
- விதவைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள் கூறப்பட்டுள்ளன.
- பெண் வயதாகியும் திருமணம் ஆகாமல் இருக்கும் நிலையும், முதியோர் மனநிலையையும், சமூகப் பிரச்சினைகளாக அமைந்துள்ளன என்பதை விளக்குகின்றன.

## அடிக்குறிப்பு

- மெய்யப்பன் தமிழ் அகராதி,ப.116
- க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,ப.85
- ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள்,ப.72
- வைரமுத்து ஆய்வுக் களஞ்சியம் 2,ப.70
- ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகள்,ப.92
- தமிழியக்கம்,ப,17
- வைரமுத்து ஆய்வுக் களஞ்சியம் 2,ப,832
- ஆண்டாள் பிரிதர்ஷினி சிறுகதைகள்,ப,638
- நீதி நூல்கள்,ப,7
- ஆண்டாள் பிரிதர்ஷினி சிறுகதைகள்,ப,363
- வைரமுத்து ஆய்வுக் களஞ்சியம் 2,ப,254-255
- ஆண்டாள் பிரிதர்ஷினி சிறுகதைகள்,ப,135
- வைரமுத்து ஆய்வுக் களஞ்சியம் 2,ப,255-256
- ஆண்டாள் பிரிதர்ஷினி சிறுகதைகள்,ப,230

## பார்வை நூல்கள்


1. ஆண்டாள் பிரிதர்ஷினி
   ஆண்டாள் பிரிதர்ஷினி சிறுகதைகள்
   ஏகம் பதிப்பகம், சென்னை - 600005,
   முதல் பதிப்பு டிசம்பர்-2009.

2. சீனிவாசன்.நம்.,
   வைரமுத்து ஆய்வுக் களஞ்சியம் 2 காவ்யா
   பதிப்பகம், சென்னை-600024,
   முதல் பதிப்பு ஜனவரி-2009.

3. சுப்பிரமணியன்.ச.வே.,
மெய்யப்பன் தமிழ் அகராதி
மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 600108,
இரண்டாம் பதிப்பு ஜூலை-2009.

4. தண்டபாணி - நீதி நூல்கள்,
உமாபதிப்பகம்,
சென்னை-600001,
15-ம் பதிப்பு மார்ச்-2011.

5. பாரதிதாசன் - தமிழியக்கம்
மணிவாசகர் பதிப்பகம்,
பாரிநிலையம், சென்னை-1,
எட்டாம் பதிப்பு -1978.

6. ராமகிருஷ்ணன் - க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
க்ரியா வெளியீடு,
மூன்றாம் பதிப்பு, சென்னை-600017,
நவம்பர் 2020.

❑❑❑

# சுந்தரர் பாடல்களில் ஆளுமை

முனைவர் பா.அருள்ஜோதி
தமிழ் உதவிப் பேராசிரியர்,
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

ஆய்வுச் சுருக்கம்

சுந்தரர் பாடல்களில் ஆளுமை என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் முன்னுரை, ஆளுமை, அடியவனாக நிற்றல், ஆட்கொள்ளல், அருள்செய்ய வேண்டுதல், அன்பு கொண்டெழுகுதல் போன்ற துணைத் தலைப்புக்களில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் நிறைவாக தொகுப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

காலந்தோறும் இலக்கியங்கள் மக்களின் வாழ்வியலைப் பறைசாற்றும் வரலாற்றுப் பெட்டகமாகும். அவ்வகையில் பக்தி இலக்கியம் மக்களின் மனங்களை நல்வழிப்படுத்தும் அறநூல் எனலாம். இறைவனின் அன்பில் கட்டுண்டு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர்களில் சுந்தரரும் ஒருவர். அவர் இறைவனை எவ்வடிவமாகவும், எல்லாமுமாகக் கண்டவர். இல்லற வாழ்வினைக் கடந்து நின்ற உயரிய உண்மைப் பொருள் இறைவனின் அன்பு என்றவர். சுந்தரர் இறைவன் மீது கொண்ட ஆளுமைப் பண்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆளுமை

ஆளுமை என்பதன் சொல்லை பிரித்து ஆய்ந்தால் ஆள்+மை என்பதாகும். இதில் 'ஆள்' என்பதனை ஆண்மகன், வீரன், ஊழியன், தொண்டன், முதிர்ச்சி பெற்ற ஓர் இளைஞன் (ப-137) என லிப்கோ தமிழ் - தமிழ் ஆங்கிலப் பேராகராதி பொருள் தருகிறது.

'ஆள்' அடிமை, ஆண்டவன், ஆண்மகன், கணவன், வீரன், ஆண்மை, நபர் (ப.232) என மதுரைத் தமிழ்ப் பேரகராதியும்,

'ஆள்' (வலி) – உடம்பினால் பெற்ற வலிமை, (தோழன்) – என்னை வழி நடத்தி ஆளும் தோழன், (என்று) – (நான்) உனக்கு அடிமை, (உகந்து) – எமை ஆளுதல் விரும்பு, (ஆகக் கொண்டாய்) – அடிமை கொண்டாய் (ஆக) – தன்னடிமையாக (பக் -167,168) என மூவர் தேவாரச் சொல்லகராதியும் பொருள் தருகிறது. இக்கருத்துக்களிலிருந்து 'ஆள்' என்பது ஒரு மனிதனின் வலிமை மற்றும் தனிப்பட்ட பண்புகள் என்று உரைக்கலாம். இதனையே 'ஆளுமை' என்பதற்கு – ஒரு மனிதனின் தனிப்பட்ட குணத்தொகுப்பு (Personality, Individuality) என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (ப.85) விளக்கம் தருவதைக் காணமுடிகிறது.

## அடியவனாக நிற்றல்

பக்தியில் இறைவனுக்கு மட்டுமின்றி இறைவனையே நாளும் நினைத்து வழிபடும் அடியவர்களுக்கும் நான் அடியேன் என்ற கொள்கையில் திளைத்தவர் சுந்தரர்.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கு அரையன் தன் அடியார்க்கும் அடியேன் (பாடல் எண்.396)

இன்பம் நிலைத்து நிற்றலாகிய செம்மையே உண்மைச் செம்மையாம் எனக் கொண்ட திருநாவுக்கரசருடைய அடியார்க்கும் அடியேன் என்கிறார்.

கல்லேன் அல்லேன் நின்புகழ் அடிமை
கல்லா தேபல கற்றேன்
நில்லேன் அல்லேன் நின்வழி நின்றார்
தம்முடை நீதியை நினைய
வல்லேன் அல்லேன் பொன்னடி பரவ
மாட்டேன் மறுமையை நினைய
நல்லேன் அல்லேன் நான்உமக்கு அல்லால்
நாட்டியத் தான்குடி நம்பீ - (பாடல் எண்.149)

திருநாட்டியத்தான் குடியில் கோயில் கொண்டிருக்கும் நம்பியே நான் என் புகழை அறிவேன். நீ உள் இருந்து உணர்த்த யாவற்றையும் கற்றேன். அதற்குத்தக நிற்கின்றேன். அவ்வாறு நின்றவர்களின் வரலாறுகளை அறிவேன். உனது பொன் போன்ற திருவடிகளைப் பரவுவேன். மறுமையின்பத்தைக் கருதேன். நான் உன் ஒருவனுக்கு மட்டுமே உறவினன் எனத் தன்னை இறைவனுக்கு அடிமையாகக் கருதும் இயல்பினைக் குறிப்பிடுகிறார்.

மட்டார் பூங்குழல் மலைமகள் கணவனைக்
கருதா தார்தமைக் கருதேன்
ஒட்டி ராகிலும் ஒட்டுவன் அடியேன்
உம் அடி அடைந்தவர்க்கு அடிமை
பட்டே னாகிலும் பாடுதல் ஒழியேன்
பாடியும் நாடியும் அறிய
நட்டேன் ஆதலால் நான்மறக் கில்லேன்
(பாடல் எண்.150)

மலைமகளுக்குக் கணவனாகிய உன்னை நினையாதவரை நான் நினையேன். நீ என்னை விட்டு விலகிச் சொன்றாலும் நான் உனக்கு அடியனாய் உன்னுடன் தான் இருப்பேன். நான் உன் அடியார்க்கு அடியேன். உன்னைப் பாடிக்கொண்டேயிருப்பேன். உன்னோடு நட்பு கொண்டு நான் உன்னை மறக்கமாட்டேன் என இறைவனைப் புகழ்ந்து பாடுவதும், அவரோடு நட்புக் கொள்வதும் தான் தனக்கு இன்பம் தருவதாகக் கூறுகிறார். இதனையே, *"மற்றவர்களைப் படைத்ததுபோல இறைவன் என்னைப் படைக்கவில்லை. தன்னை ஏராளமான தமிழ்ப் பாடல்களால் பாடுவதற்காகத்தான் படைத்தான். நானும் சில பாடல்களைப் பாடினேன். ஆயினும் அவனது விருப்பத்தை எந்த அளவு நான் நிறைவேற்றினேன்? சிறிதளவு கூட இராது என்னும் பொருள் வெளியாகும்."* (திருமுறைத் திருநெறி, ப-275) என்று முதுமுனைவர் சி.அருணை வடிவேலு முதலியார் அவர்கள் குறிப்பிடுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

## ஆட்கொள்ளல்

சுந்தரர் இவ்வுலகில் நிகழும் அனைத்துச் செயல்களையும் தாம் அறியேன் எனவும் ஆதலால் தன்னை ஆட்கொள்ள வேண்டுமென இறைவனிடம் வேண்டுகிறார்.

பொய்யவன் நாயடியேன்
புகவேநெறி ஒன்றறியேன்
செய்யவ னாகிவந்திங்கு
இடர்ஆனவை தீர்த்தவனே
மெய்யவ னேதிருவே
விளங்குந்திருக் காளத்திஎன்
...... ...... (பாடல் எண். 264)

பொய்யை உடையவனும், நாய்போலும் அடியவனும், நன்னெறியில் புகுதற்கு வழி ஒன்றும் அறியாதவனும் ஆகிய எனது துன்பங்களையெல்லாம் நீக்கி என்னை ஆட்கொள்ள வேண்டும் என்கிறார். மேலும்,

தன்மை யினால்அடி யேனைத்தாம்
ஆட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்தொண்டன்
என்பதோர் வாழ்வுதந்தார்
(பாடல் எண். 168)

எனப் பேரருள் உடைமையால் என் பிழையைத் திருவுளம் கொள்ளாமல் வேண்டும் என்றே என்னை ஆட்கொள்ள வந்த அந்நாளில் பலர் கூடியிருந்த சபையில் என் பேதைமையால் நான் கூறிய வசைச் சொற்களை மகிழ்ந்தேற்று எனக்கு வன்தொண்டன் என்ற பதவியைத் தந்தவரும், பின்னரும் நான் பாடிய வசைப்பாடல்களைக் கேட்டு

மகிழ்ந்து எனக்கு வேண்டுமளவு பொன்னைக் கொடுத்து போகத்தை எய்துவித்த நன்றிச் செயலை உடையவரும் ஆகிய இறைவர்க்கு இடமாய் இருப்பது நமது திருநாவலூரேயாகும் என்கிறார். இறைவன் தனது வசைச் சொற்களைக் கருத்திற் கொள்ளாது தம்மை ஆட்கொண்ட திறத்தை உரைக்கிறார்.

காதல் செய்து களித்துப் பிதற்றிக்
கடிமா மலரிட்டுனை ஏத்தி
ஆதல் செய்யும் அடியார் இருக்க
ஐயங் கொள்வது அழகிதே
ஓதக் கண்டேன் உன்னை மறவேன்
உமையாள் கணவா எனையாள்வாய்
(பாடல் எண். 423)

பக்தி செய்து ஆனந்த வெறி மேலிட்டுப் பிதற்றி மணமுள்ள சிறந்த பூக்களால் உன்னை அருச்சித்துத் துதித்து உனக்கு வேண்டியவற்றைச் செய்யும் அடியார்கள் பலர் இருக்க நீ என் பொருட்டுப் பிச்சை எடுப்பது அழகாமோ சோறு இரந்து வருவதாகச் சொன்ன அச்சொல்லைச் கேட்ட பின் இனி உன்னை எப்பொழுதும் மறக்க மாட்டேன் உமாதேவியின் தலைவனே என்னை ஆட்கொள்பவனே என இறைவன் தன்னை ஆட்கொண்ட செயலையும், தான் இறைவனை மறவேன் எனவும் குறிப்பிடுகிறார்.

### அருள்செய்ய வேண்டுதல்

சுந்தரர் முதுமையும், நோயும் மனிதர்களுக்கு இயல்பாக வரும். இதுவரை தான் நன்மையில்லாத செயல்களை செய்து விட்டதால் இனியாவது இறைவன் தனக்கு அருள்செய்ய வேண்டுமென வேண்டுகிறார். இதனையே,

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணிந்து எய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
....... ...... ....... .... (பாடல் எண். 615)

எனப்பாடலடிகள் புலப்படுத்தக் காணலாம்.

முந்திச் செய்வினை இம் மைக்கண் நலிய
மூர்க்க னாகிக் கழிந்தன காலஞ்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன்
(பாடல் எண் 617)

முன் வினைப் பயனால் மூர்க்கனாகி காலத்தைக் கழித்து விட்டேன் உலகப் பற்றினின்றும் நீங்கி உன்னை மனத்தில் இருத்தவும் தவறினேன் யாசிப்பவர்களுக்கு ஈதலும் செய்திலேன். எனக்கு நீ கடைத்தோறும் வழியைக் காட்டியருள்வாய் எனத் தனக்கு அருள் செய்து நல்வழி காட்டிட வேண்டுகிறார்.

சுந்தரர் தனது வாழ்நாளில் இறைவனைக் கண்டு அவரது உண்மையான அன்பினைப் புரிந்து அவரே தமக்கு அருள் செய்ய வேண்டுமென வேண்டுகிறார்.

மற்றொரு துணைஇனி மறுமைக்கும் காணேன்
வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணைஎன்று கருதேன்
துணைஎன்று நான்தொழப் பட்டஒண் கடரை
(பாடல் எண். 594)

சுற்றத்தாரையும் துணையென்று நினையாமல் இவனே துணை என்று தெளிந்து நாள்தோறும் என்னால் வணங்கப்படுகின்ற விளக்குப் போன்றவனும்; தேவராலும் அறியப்படாத மெய்ப்பொருளை எனக்கு அறிவித்த கடவுளும் ஆகிய பெருமானை அவன் கயிலையில் இருந்த படியே திருக்கழுமலம் என்னும் இவ்வள நகரில் கண்டு கொண்டேன் இனி அவனை மறவாதிருக்கும் திருவருளைப் பெற்றேன். ஆதலால் இம்மைக்கேயன்றி மறுமைக்கும் இனி மற்றொரு துணையை நாடேன் என இறைவனைக் கண்டகாட்சி குறித்தும், மறுபிறவியிலும் வேறொரு துணை வேண்டமெனவும் குறிப்பிடக் காணலாம்.

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்அருள் தந்தஎம் தலைவனை மலையின்
(பாடல் எண்.593)

இவ்வுடம்பின் இறுதிக் காலத்தில் சாதலும், பின்பு வேறோர் உடம்பில் பிறத்தலும் என்னும் இரண்டையும் விலக்கி இந்த ஒரு பிறப்பிலேயே என்னைப் படைத்து அவ்வாறே வந்து எனக்கு அருளியவர் என அவரது அருட்சிறப்பினை எடுத்துரைக்கிறார்.

அன்புகொண்டெழுகுதல்

இன்பம் உண்டேல் துன்பம் உண்டு
ஏழைமனை வாழ்க்கை" (பாடல் எண்.69)

அறியாமையால் வரும் மனைவாழ்க்கையில் இன்பம் உள்ளதுபோலவே துன்பமும் வருதல் உண்டு என வாழ்வியல் உண்மையை உரைத்திட்டவர் சுந்தரர். மேலும், உள்ளம் எனும் கோவிலில் இறைவனை நிலைநிறுத்தி பக்தி எனும் திறத்தால் உலகையே கட்டிப் போட்டவர். அன்பு என்னும் பாசத்தால் அரசர் முதல் அடியவர் வரை அனைவரையும் ஏற்று இறைவன் தன்னை ஆட்கொள்ளவும் செய்தவர். ஆக சுந்தரர் 'சைவசமயத்தின் விடி வெள்ளி' என உரைக்கலாம். *"சுந்தரரது காலமே தமிழகத்தில் சைவசமயத்தின் பொற்காலம்' எனக் கூறலாம். சுந்தரர் காலத்திலோ பல்லவர்கள் நாயன்மார்களாய் விளங்கினர். பாண்டியனும் சைவத்தில் புதுக் கிளர்ச்சி பெற்றுத் திகழ்ந்தான். சேரர்களில் சேரமான் பெருமான் நாயனாராகிச் சுந்தரருக்கு 'தோழர்' என்ற பெயரில் அடியவரானார். சோழனும் பாண்டியனது மைத்துனக் கேண்மையால் கிளர்ச்சி பெற்றான். எனவே 'நெடியோன் குன்றமும், தொடியோன் பௌமும் மற்று குணகுட கடல்களுமாகிய எல்லைக்குட்பட்ட தமிழகம் முழுதும் சுந்தரது நா அசைந்தால் அசையக் கூடிய நிலை இருந்தது. அவரோ, தம்பிரான் தோழராய்ச் சிவபெருமானோடு மிக உரிமையோடு அவ்வப்பொழுது அளவளாவும் நிலையைப் பெற்றிருந்தார். அத்துடன் அவர் நடுநாட்டு அரசர் தத்துப் பிள்ளை எனவே அவரது காலத்தை 'சைவத்தின் பொற்காலம்' எனக் கூறினால் அது மிகையாதல் இல்லை. ஆகவே சேக்கிழார் திருத்தொண்டர்கள் வரலாற்றிற்குக் காப்பிய வடிவம் தருகின்ற பொழுது சுந்தரரையே அக்காப்பியத் தலைவராக வைத்ததில் வியப்பு யாதும் இல்லை."* (பக் 249,250) என உரைக்கிறார் மகாவித்துவான் சி.அருணைவடிவேல் முதலியார் குறிப்பிட்டுள்ளதையும் இங்குச் சுட்டலாம்.

செத்த போதினில் முன்னின்று நம்மைச்
சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தைஉண் டேமனம் உண்டே
மதிஉண் டேவிதி யின்பயன் உண்டே
...... ஆரு ரானை மறக்கலும் ஆமே
(பாடல் எண்.606)

நாம் செத்த போது சிலர் வந்து கூடி நம்மை இகழ்வதற்கு முன்னே நமக்கு இறைவன் கொடுத்த கருத்து உளதன்றோ நெஞ்சு உள்ளதன்றோ அறிவு நாம் செய்த புண்ணியத்தின் பயன் உள்ளது அவற்றால் தேவர்கள் இயல்பாகவே பாசம் இல்லாதவன் நம் தலைவன் என் தந்தைக்குத் தலைவன், எனக்குத் தலைவன் திருவாரூர் இறைவனை நினைக்காமல் மறத்தலும் இயலுமோ? சிந்தையும் மனமும் வேறு வேறானவையாகும்.

பொய்யாத வாய்மையால் பொடிபூசிப்
போற்றிசைத்துப் பூசை செய்து
கையினால் எரிஓம்பி மறைவளர்க்கும்
அந்தணர் ........ " (பாடல் எண்.304)

மறந்தும் பொய் கூறாத உள்ளத்தோடு திருநீற்றையணிந்து போற்றி எனச் சொல்லிப் பலவகை வழிபாடுகளையும் செய்து தங்கள் கையால் தீயை வளர்த்து வேத ஒழுக்கத்தை கைக் கொண்டுள்ள அந்தணர்களது திருக்கருப்பறியலூர் தலைவனே என இறைவனைப் புகழ்கிறார்.

பேணீர் ஆகிலும் பெருமையை உணர்வேன்
பிறவேன் ஆகிலும் மறவேன்
காணீர் ஆகிலும் காண்பன்என மனத்தால்
கருதீர் ஆகிலும் கருதி - (பாடல் எண்.146)

எனது சிறுமையையுணர்ந்து என்னை விரும்பாவிடினும் நான் உனது பெருமையை உணர்ந்து உன்னை விரும்புவேன். இப்பிறவி

நீங்கினும் உன்னை மறவேன். நீ என்னைப் புறக்கணித்தாலும் நான் உன்னைக் கண்ணாரக் காண்பேன் என இறைவன் மீது தான் கொண்ட அன்பினைப் புலப்படுத்துகிறார்.

தந்தை யாரும் தவ்வை யாரும்
எட்டனைச்சார் வாகார்
வந்து நம்மோடு உள்அ ளாவி
வானநெறி காட்டும் - (பாடல் எண்.70)

தந்தையாரும், தமக்கையாரும் நமக்கு எள்ளளவும் துணையாக மாட்டார். ஆதலின் நீர் எம்பால் வந்து உள்ளாய்க் கலந்து உசாவி எமக்கு வீட்டு நெறியைக் காட்டுவீராக என இறைவன் தன் உள்ளத்தில் கலக்குமாறு வேண்டுகிறார்.

முடிவுரை

இவ்வாறாக சுந்தரர் தன் பக்தி என்னும் மனவலிமையால் இறைவன் மீது அன்பு கொண்டொழுகுதலும், தன்னை ஆட்கொள்ளவும், தனக்கு அருள்செய்யவும் வேண்டுகிறார். தனக்கென கொண்டிலங்கிய அன்பெனும் பண்பினால் இறைவனுக்கு அடியவனாக நிற்றலும், இறைவனது அடியவர்களுக்கு அடியவனாகவும் விளங்குகின்றார். இத்தகைய சிறப்புகள் சுந்தரரின் ஆளுமைப்பண்பினைப் பறைசாற்றுகிறது.

துணைநூற் பட்டியல்

1. மூவர் தேவாரச் சொல்லகராதி - முதற்பதிப்பு -2011, தொகுப்பாசிரியர் டாக்டர் புலவர்மணியன், வெளியீடு - இராமானந்த அடிகளார் அறக்கட்டளை, சின்னவேடம்பட்டி, கோவை -641 029.

2. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி – முதற்பதிப்பு -1992, முதன்மை ஆசிரியர் - டாக்டர் பா.ரா.சுப்பிரமணியன்

3. லிப்கோ தமிழ் - தமிழ் ஆங்கிலப் பேரகராதி, முதற்பதிப்பு-2008, ம.பதிப்பு -2010,

4. மதுரைத் தமிழ்ப்பேரகராதி – முதற்பதிப்பு - 1937, ம.பதிப்பு -1956, மதுரை எக்ஸெல்ஸியர், பவர் பிரஸில் பதிப்பிக்கப் பெற்றது

5. திருமுறைத் திருநெறி – மகாவித்துவான் சி.அருணைவடிவேல் முதலியார், முதற்பதிப்பு -2003, தமிழ் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

6. பன்னிரு திருமுறைகள் - உரையாசிரியர் வித்துவான் நாராயண வேலுப்பிள்ளை – வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

□□□

# மலைபடுகடாமில் ஆளுமை

**உ.மணிமேகலை**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச் சுருக்கம்**

மலைபடுகடாமில் ஆளுமை என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் முன்னுரை, கலைக்களஞ்சியம் தரும் விளக்கம், மலைபடுகடாமில் ஆளுமை போன்ற துணைத்தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டுரையின் நிறைவாக தொகுப்புரை வழங்கப்பட்டுள்ளது.

**முன்னுரை**

தனி மனிதனுடைய எண்ணங்கள் செயல்படும் முறை நடத்தைகள் அவன் பிறருடன் பழகும் முறை மனப்பான்மைகள் கல்வியை அறிவாற்றல் உணர்ச்சிகள் வாழ்க்கை பற்றிய கண்ணோட்டம் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மையை அவனுடைய ஆளுமை எனப்படும்.

கவிஞரின் உள்ளத்து உணர்ச்சிகளைக் கவிதைகளில் பதிவு செய்யப்படுகின்றன. உணர்ச்சிகளின் உவகை, பெருமிதம், வெகுளி, நகை எனப் பல வகை மெய்ப்பாடுகள் எழும்போது கவிதையில் சுவைகள் படிகின்றன. புற உலகை ஆராய்ந்து தனது கலைப்படைப்பிற்குத் தேவையான புள்ளிகளைத் தேர்ந்தெடுப்பதும் ஆளுமை என்ற சொல்லில் வரையறையாகக் கொள்ளுகிறேன் என்று பேராசிரியர் நா.வானமாமலை கூறுகிறார். படைப்பாளன் சமூகத்தைக் கூர்ந்து நோக்கி அனுபவங்களைத் தேர்ந்து அவற்றைப் படைப்பில் இணைக்கிறான். ஒவ்வொரு படைப்பாளனும் வெவ்வேறு வகையில் கருப்பொருளைத் தேர்ந்து அழகியல் நோக்கில் படைப்பதால் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தன்மை இருக்கும் அத்தன்மையே ஆளுமையாகின்றது. ஒருவரின் வாழ்வியல் சூழலும் கற்ற கல்வியும் உற்ற நட்பும் பெற்ற கொள்கையும் ஆளுமை உருவாக்குகின்றன. இலக்கியத்தில் புலவர்களில் ஆளுமையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைக்களஞ்சியம் தரும் விளக்கம்**

"ஆளுமை என்பது அச்சம் சினம் பாலியல் ஆகிய இயல்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும் என்பது நடத்தைக் கொள்கையினரின் கருத்தாகும்."[1] "ஆளுமை என்பது ஒருவரது உடல் அமைப்பே என்றும் ஒருவருடைய உடலமைப்பு அவன் வாழும் சமூகச் சூழ்நிலை ஆகியவற்றின் தன்மைக்குத்தக்க அமையும் இயல்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்ததே என்றும், ஒருவனது இயல்பூக்கங்களும் உள்ளக்கிளர்ச்சிகளும் ஒருங்கே சேர்ந்தமைவதே என்றும் பாரம்பரிய இயல்புகளும் அனுபவத்தால் ஈட்டிய இயல்புகளும் ஒருங்கே சேர்ந்தமைவதே"[2] என்று பலவாறு ஆளுமைக்கு கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது.

"தனிமனிதன் எதிர்கால வாழ்விற்காக தன் செயல் சிந்தனைகளை மாற்றி அமைத்துக் கொண்டு செயல்படுவதே இங்கு ஆளுமை எனப்படுகிறது"[3]

"ஒரு மனிதனிடம் காணப்படும் நிலையான நடத்தைக் கூறுகளே ஆளுமை பண்புக்கூறுகள் எனப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே சில சிறப்புப் பண்புகளைப் பெற்று இருப்பர்.இப்பண்புகள் ஆளுமையுடன் பெரிதும் தொடர்பு உடையனவாகும். மேலும் இப்பண்புகளே

ஆளுமையினைப் பிரதிபலித்துப்பொலிவுறச் செய்கின்றன. ஆளுமை பண்புகளாக உளவியல் அறிஞர்கள் பின்வருவனவற்றைக் கூறியிருக்கின்றனர். அவை பிறரிடமிருந்து ஒருவரை வேறுபடுத்திக் காட்டக் கூடிய தனிச்சிறப்புப் பண்புகள் முழுமூச்சுடன் செயல்படல் மனவெழுச்சி, முதிர்ச்சி, நம்பிக்கையுணர்வு, தோழமை, எதிர்பாற்றல்,அழகுணர்் ஆற்றல் போன்றவை ஆகும்."[4]

## மலைபடுகடாமில் ஆளுமை

கருத்து வெளிப்பாடு மட்டுமின்றி கவிஞர்களின் சொல் வெளிப்பாடும் பொருள் வெளிப்பாடும் உவமையாகக் கூறும் பொழுதும் ஆளுமை வெளிப்படுகிறது. பெருங்கௌசிகனார் எழுதிய மலைபடுகடாமில் ஆளுமையை காணமுடிகிறது.அவர் பல சொற்களைப் பயன்படுத்தி இருப்பினும் நீர் குறித்த சொற்களை உவமையாகவும் கருத்துக்களாகவும் பயன்படுத்திய ஆளுமைப் பண்பை காணலாம்.பல வகையான இசைக் கருவிகளை இசைக்கும் போது ஏற்படும் ஓசை பல செல்வங்களும் உண்டாவதற்கு காரணமாக உள்ளது. அம்மழைபெய்யும் மேகம் உள்ள இருண்ட வானத்தில் அந்த ஓசை முழங்குகிறது என்பதை,

"திருமழை தலைஇய இருள் நிற விசும்பின்
விண் அதிர் இமிழ் இசை கடுப்ப"
(மலைபடு.1-2)

என்ற அடிகளில் அறியலாம்.

கரையை இடித்தும் போதும் அளவு மலையிலிருந்து வரும் யாரு கடலை நோக்கி வருதல் போல அவனிடமிருந்து ஒரு பொருளுட்ன் பரிசிலர் விரைந்து வருகின்றனர் என்று நீரின் வகையான கடலினை கூறியுள்ளார்.

மேலும் உழவர்களுக்கு நீர் அறிய காலத்தில் வந்து பயன் தருவது போல மன்னன் குடிகளை பேணுகிறான் என்பதை,

"புது நிறை வந்த புனல் அம் சாயல்" (61)

என்ற அடியின் மூலம் அவரின் சொல் ஆளுமையைக் காணமுடிகிறது.

மலைபடுகடாமில் ஓசைகளைக் கூறும்பொழுது கரும்பின் ஆலையின் ஓசையை கூறவரும் ஆசிரியர் கரும்புகளை விரைவாக நெறிப்பதால் சாறு பொழிகிறது. அந்தச் சாறு மழை போல பொழிகிறது என்று உவமை காட்டுகிறார்

"மழை கண்டன்ன ஆலை"

சொல் ஆளுமையையும் காணமுடிகிறது மழை பெய்ததால் நிறத்தில் வித்துக்கள் விரும்பியவாறே பிண்ணந்து என்றும் மழையால் ஏற்பட்ட விளைச்சலைப் பற்றியும் கூறும்பொழுது ஆசிரியரின் நீர் பற்றிய சொல் ஆளுமையை.

"பெயல் மின்னுவசிவு பொழிய" (99)

"மலி துளி தழாலின்" (103)

"புயற் புனினு போகிய" (20)

என்ற அடிகளின் மூலம் அறிய முடிகிறது.

வழியில் கானவர்கள் தரக்கூடிய உணவைப் பற்றி விவரிக்கும் பொழுது மழையால் பூக்கள் செழித்து வளர்ந்துள்ளன என்பதே கூறுமிடத்து

"தூவல்" (146)

என்று மழை பற்றிய சொல்லாட்சியை ஆசிரியர் பயன்படுத்தி உள்ளமையை தெளிவுபடுகிறது.

நன்னனுடைய கோபுரவாயிலில் பொருட்கள் நிறைந்து தோன்றுவதற்கு மேற்கு மலையில் பிறந்து ஓடி வரும் குளிர்ந்த பெரிய காவிரியாற்றினை உவமையாகக் கூறியுள்ளார்.

"தண் பெருங்காவிரி" (527)

என்ற அடிகளின் ஆறுகள் பற்றிய ஆளுமையை அறியலாம்.

ஓசைகளைக் கூறும் பொழுதும் நன்னனுடைய நாட்டின் வளத்தைக் கூறும் பொழுதும் கடல், ஆறு, குளம், மழை போன்ற நீர் நிலைகளை உவமையாகவும் சேயாறு, காவிரி ஆறு போன்ற ஆறுகளைப் பற்றியும் ஆசிரியர் கூறியுள்ளதன் மூலம், நீர் பற்றிய ஆளுமையை உணரமுடிகிறது.

அடிக்குறிப்பு

1. கலைக்களஞ்சியம் தொகுதி 1 ப.460
2. மேலது ப.460
3. மேலது ப.460
4. எஸ்.சந்தானம் கல்வி உளவியல் அடிப்படைக் கூறுகள் ப.446

துணைநூற்பட்டியல்

1. பத்துப்பாட்டு
2. பத்துப்பாட்டு - மாணிக்கனார் உரை
3. கலைக்களஞ்சியம் தொகுதி 1
4. கல்வி உளவியல் அடிப்படை கூறுகள் - எஸ் சந்தானம்

❑❑❑

# தமிழ்மகன் புதினங்களில் ஆளுமைக் கூறுகள்

**ம.இராஜகோபால்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ந.க.ம.கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச்சுருக்கம்**

ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் சமுதாயம் தனிமுக்கியத்துவம் அளிக்கிறது. 'தன் குடும்பம்' என்று பார்க்கும் மனிதன் 'தன் சமுதாயம்' என நினைக்க தவறிவிடுகிறான். தனது வாழ்வின் அனைத்து நிலைகளையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஒருவனே அனைத்தையும் அடைந்ததாய்க் கருதப்படுகிறான். இந்தச் சமூகத்தில் குடும்ப உறவுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வு, தனிமனிதனும் சமூகமும், சிக்கல்களின் காரணிகள், பெண்களின் நிலை, ஆணாதிக்க நிலை போன்ற சூழ்நிலைகளில் வாழ ஆணும் பெண்ணும் பல சிக்கல்களைக் கடந்துதான் வெற்றி பெற முடியும் என்பதை ஆய்வின் வழியாக அறியலாம்.

## ஆளுமை

ஆளுமை என்பது என்ன என்பதைப் பற்றி உறுதியான எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறை இல்லை. உளவியல் நோக்கில் ஆளுமை என்பது ஒருவரின் ஒழுங்கமைந்த, இயங்கியல் பண்புகளும், அதைத் தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகளையும் பிரிக்கிறது. பொது வழக்கின் ஆளுமை என்பது ஒருவரின் வெளித்தோற்றத்தைப் பெரிதும் குறிக்கிறது. ஆளுமை என்பதை சுருக்கமாக "ஒருவரை தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் போன்றவற்றால் ஆன ஒன்று" என வரையறுக்கலாம். அத்துடன் ஆளுமை ஒருவரின் உள்ளிருந்து உருவாகி அவருடைய வாழ்க்கைக்காலம் முழுவதும் சீராக அமைகின்றது.

## முன்னுரை

மனிதக்குழுவின் கூட்டுத் தொகுதி சமுதாயம் எனப்படும். குடும்பம் சமூகத்தின் நெருக்கமான குழுவாகும். மனிதன் ஒற்றுமை, பாசம், தோழமை போன்ற உன்னத உறவுகளை சமுதாயத்தின் வாயிலாகப் பெறுகிறான். மனிதன் கூடி வாழத் தொடங்கி எப்பொழுது சமுதாயத்தைத் தோற்றுவித்தானோ அன்றே சிக்கல்களும் தோன்றிவிட்டன. தமிழ்மகன் புதினங்களின் வழியாக சமூகத்தில் குடும்ப உறவுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வு, தனிமனிதனும் சமூகமும், சிக்கல்களின் காரணிகள், பெண்களின் நிலை, ஆணாதிக்க நிலை தொடர்பான சிக்கல்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## சமுதாயம்

பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனுக்குத் தேவைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள சமுதாயம் என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டான்.

> "மனிதன் சேர்ந்து வாழத் தொடங்கிய நாளே சமுதாய அமைப்பிற்கு வித்திட்ட நாளாகும். கூட்டு வாழ்க்கையே சமுதாய வாழ்க்கை"[1]

என்று அ.மு.பரமசிவானந்தம் குறிப்பிடுகிறார். மனிதர்கள் பலர் சேர்ந்து வாழ்வது குடும்பம். பல குடும்பங்கள் சேர்ந்தது சமூகம். சமூகத்தின் சட்டதிட்டங்கள், செயல்முறைகள், ஒருவருக் கொருவர் உதவுதல், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுவது சமுதாயம்.

**"சமூக அமைப்பிற்கு குடும்ப அமைப்புதான் அடிப்படையாகத் திகழ்கிறது"[2]**

என க.சக்திவேல் கூறுகிறார். குடும்பம் என்பது குறைந்தபட்சம் ஆண் ஒருவனும், பெண் ஒருத்தியும் குழந்தைகளோடு சமுதாயத்தாலோ, மணத்தாலோ அமைந்ததாகும்.

**"சமுதாயம் எப்படி இருந்தாலும் அதன் தாக்குதலை கடந்து தனிமனிதர் தம் நல்வாழ்வுக்கு வேண்டிய வழியை வகுத்துக் கொண்டு அமைதியாக வாழ முடியும்"[3]**

என்கிறார் மு.வ. மக்கள் பலர் கூடி வாழ்கின்ற நிலை சமுதாயம் எனப்படும். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது பழமொழி. மக்கள் சேர்ந்து வாழும் இடம் சேரி எனப் பெயரிடப்பட்டதும் கூட்டு வாழ்வைக் குறிப்பதே ஆகும்.

பழக்க மரபு, செயலாற்றும் முறை, அதிகார வலிமை, ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகியவற்றின் ஓர் அமைப்பு முறையாகவும், பல குழுமங்கள், பிரிவுகள் ஆகியவற்றுடன் மனிதனின் சுதந்திரம், நடத்தை ஆகியவற்றை நெறிப்படுத்தும் ஒழுங்குமுறையாகச் சமுதாயம் விளங்குகிறது.

சமுதாயம் என்பது தனிமனிதனின் நடத்தை, வாழ்வின் பல்வேறு அம்சம் இவற்றைக் கொண்டு அமைந்துள்ளது. மனிதர்களிடையே காணப்படும் பிரிவுகளானக் குழுமம், இனம், கூட்டு அமைப்பு ஆகியனவும் சமுதாயத்தில் உண்டு. இம்முறையில் சமுதாயம் என்பது ஒன்றுக்கொன்று தொடர்பும், செயல்பாடும் உடைய பல்வேறு வலையேயாகும்.

சமுதாயம் என்னும் பதம் ஒரு கோட்பாட்டு அளவாகும். அப்பதம் ஒரு கூட்டத்தின் உறுப்பினர்களுக்கு இடையேயான உறவின் தொகுதியைக் குறிக்கும். இம்முறையில் மனித இனத்தின் உறவுநிலை எங்கெங்கு உள்ளதோ அங்கெல்லாம் சமுதாயம் இருக்கும் என்று கொள்ளலாம். அவ்வுறவு நிலை நல்லதாக இருந்தாலும் சரி தீங்காக இருந்தாலும் சரி அங்கு சமுதாயம் இருக்கின்றது.

சமுதாயம் என்பது உறவு நிலைகளின் அமைப்பு முறையாகும். மனித இனத்தில் காணப்படும் உறவுநிலைகளின் அமைப்பு முறையே ஒருமுறையே ஒருபாணியே சமுதாயம் எனப்படும். எனவே சமுதாயத்தைப் பற்றிக் கூறும் போது அது மனித உறவுகளின் கூட்டுத் தொகுதி என்று பார்ச்ன்ஸ் கூறுகிறார்.

**தனிமனிதனும் சமூகமும்**

மனிதனை சமூகப்பிராணி என்பர்.

**"இனம், குலம், குடும்பம், சமுதாயம் இதர சமூகப் பிரிவுகள் ஆகிய மக்கட் குழுக்களுள் ஒருவனாகவே மனிதன் இருக்கின்றான். அதனாலேயே அவனை ஒரு சமூகப் பிராணி என்று அழைக்கிறோம்"[4]**

என்று இலக்குமிரதன் பாரதி. எனவே தனிமனிதன் சமூக அமைப்பின்றி வாழ முடியாது. எனவே தன்னுடைய தேவைகளுக்காகவும், பாதுகாப்பிற்காகவும், வாழ்க்கை வசதிக்காகவும், பிற தேவைகளுக்காகவும் ஏனைய மனிதர்களோடு சேர்ந்து வாழ வேண்டிய கட்டாயம் அவனுக்கு இருக்கிறது. மனிதருடைய இயல்பு மனிதருடைய குழு அல்லது கூட்டமே சமூகம் எனப்படுகிறது.

**சிக்கலின் காரணிகள்**

மனிதன் சமூக வயத்தினனாதலின் தன் முனைப்புக் கட்டுப்படுத்தப்படுகிறது. கட்டுப்பாடு மனிதனுக்கே சமூக மரபினதாக உருவாகும் தன்மையே உருவாக்கினும் சில இடங்களில் சிக்கல்களையும் தோற்றுவிக்கிறது. இதனை

**"ஒரு மனிதன் சிக்கலில் அகப்பட்டுத் தவிப்பது தனிமனித சிக்கல் என்றும் மக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சிக்கினால் துன்பப்படுவது சமூகச் சிக்கல் என்று சொல்லப்படுகிறது"[5]**

வகைப்படுத்துவர் என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது. சமுதாயச்சிக்கல்கள் என்பவை சமூக மக்களிடையே உருவாகும் உறவுகளின் சேர்க்கை.

"சமூகச்சிக்கல்களினால் சமூகத்தில் வாழும் மக்கள் அதிக அளவு துன்பப் படுகின்றார்கள். இத்துன்பம் நேரடியாகவும், மறைமுகமாகவும் இவர்களை பாதிக்கிறது. சமூகச்சீர்கேடுகளுக்கும் சமூகச்சிக்கல்கள் அடிப்படையாக அமைகின்றன"[6]

என்று வாழ்வியற் களஞ்சியம் எடுத்துரைக்கிறது. மனிதர்களிடையே காணப்படும் பிரிவுகளான குழுமம், இனம், கூட்டமைப்பு, வகுப்பு ஆகியனவும் சமுதாயத்தில் உண்டு. சமுதாயம் என்பது ஒன்றுக்கொன்று தொடர்பும், செயல்பாடும் உடைய பல்கூட்டு பொருளாகும்.

**குடும்ப உறவுகள்**

குடும்பம் என்பது மனித உறவுகளின் கூடாக அமைகிறது. இக்குடும்பத்தில் பல உறவுகள் ஒன்றிணைந்த தேனீக்களைப் போல கூடி வாழ்கின்றனர். உறவுகள் பிறப்பினாலும், திருமணத்தினாலும் ஏற்படுகின்றன. அவை பாசம் என்னும் வலையினால் அவைப் பின்னப்படுகின்றன. பாசத்தின் ஆழம்தான் உறவின் வலிமை, இவை ஒருங்கிணைந்ததே குடும்பமாகும்.

"குடும்பம் சமுதாயத்தின் ஓர் அங்கம். சமுதாயம் நலம் பெற வேண்டுமானால் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும். குடும்பம் என்பது தாய், தந்தை, பெற்றோர், பிள்ளைகள், கணவன், மனைவி, சகோதர, சகோதரிகள் என்ற நெருக்கமான உறவுகளைக் கொண்டது"[7]

குடும்பம் என்பது ஆழமரத்தினைப் போலவும் அதில் வாழும் உறவுகள் அந்த மரத்தின் விழுதுகள் போல ஒன்றிணைந்ததாகும். மனித சமூகத்தின் தொடக்க காலத்தில் திருமணம் என்ற அமைப்போ, குடும்பம் என்ற அமைப்போ காணப்படவில்லை.

மனிதன் தன்னுடைய தேவைகளை முழுவதுமாக நிறைவேற்ற முடியாத நிலையில் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் காரணமாகவும், கணவன், மனைவி, பெற்றோர், குழந்தைகள் என்ற இரத்தத் தொடர்பினாலும் குடும்பம் என்ற ஓர் அமைப்பு உருவானது.

"குடும்பம் எல்லா சமூகங்களிலும் உள்ள அடிப்படையான தாய், தந்தை, மக்கள் அடங்கிய குடும்பத்தைத் தனிக்குடும்பம் என்கிறோம். இவ்விதக் குடும்பத்தின் அமைப்பு சமூக வழக்காலும், சமயத்தாலும் கட்டுப்படுத்தப்படும் உறவு குடும்பத்தினின்றும் ஏற்படுகிறது. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்குக் குடும்பம் அடிப்படையானது"[8]

என்ற இயம்புகிறது கலைக்களஞ்சியம்.

**பெண்களின் நிலை**

இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை உயர்ந்து காணப்படுகின்றன. இருப்பினும் முழுமையாக ஆணுக்கு நிகராக முன்னேறவில்லை. ஆரம்ப காலத்திலேயே சமுதாயம் பெண்களின் தலைமையிலேயே இருந்தது. ஆனால் சமூக வளர்ச்சியின் காலகட்டத்தில் ஆண்கள் பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். இதற்கு வசதியாக ஆண்கள் பெண்ணடிமைத் தனத்தை நியாயப்படுத்தியும், சமூகத்தில் அந்நிலை மாறாதிருக்கவும் கோட்பாடுகளை ஏற்படுத்தினர்.

பெண் இனம் தாங்கள் அடிமைகளாகவே வாழ்வது தான் நியாயம் என்று ஏற்றுக் கொள்வதுடன் அவர்களே மற்றவர்களுக்கு வலியுறுத்தி மற்ற பெண்கள் வழுவாது பாதுகாக்கும் பாதுகாவலர்களாகவும், தங்களின் சந்ததியினர்க்கும் கட்டாயமாக்கினார்கள். ஒரு காலத்தில் மனித சமுதாயத்தில் பெண்கள் தாம் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். ஆண்கள் அவர்களுக்கு அடங்கித்தான் நடந்தார்கள் என்பதை பெண்தெய்வ வழிபாடு மூலம் அறியலாம். பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் பெண்ணுரிமைப் பற்றி குறிப்பிடும் பகுதிகள்

உண்டு. தொல்காப்பியர் ஆண் பெண் சமத்துவத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறத்தல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"[9]

என்பது தொல்காப்பிய களவியல் சூத்திரம். பயமும் நாணமும் அறியாமையும் முற்பட்டு நிற்றல் எப்பொழுதும் பெண்களுக்கு உரிய குணம் என்பது இச்சூத்திரத்தின் பொருளாகும்.

ஆணாதிக்க நிலை

ஆதிக்கக்காலம் முதல் இன்றைய காலம் வரை 'ஆண் என்பவன் ஆளப் பிறந்தவன்' என்ற வாக்கியம் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. இவ்வுலகில் காணப்படும் அனைத்து செயல்களிலும் ஆணுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

"பெண்ணை கொடிப் போன்றவள் என்று சொல்லக் காரணம் அந்தக் கொடி தன்னைச் சுற்றி படர வேண்டும் என்று ஆண் திட்டமிட்டதே காரணம்"[10]

பெண் என்பவள் எப்பொழுதும் ஆணைச் சார்ந்து இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். பெண்கள் கொடி போன்றவள் என்றும், மலர் போன்றவள் என்றும், மென்மையானவள் என்றும் கூறுகின்றனர். இக்கருத்தினைப் பெண்கள் தங்களின் புகழுரையாக எண்ணிக் கொண்டு உள்ளனர். ஆனால் அது தவறு. ஆண்கள் வீரமுடையவர்கள் வளமை நிறைந்தவர்கள் எங்களிடம் நீங்கள் மோதி முன்னேற முடியாது என்று கூறும் வகையில் அமைந்த மறைமுக சொற்களாகும்.

முடிவுரை

மக்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களையும், போராட்டங்களையும் எடுத்துரைக்கிறது. ஆண்களும், பெண்களும் சம உரிமையில் வாழப் பல இன்னல்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. குடும்பம் என்ற அமைப்பு மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. குடும்பங்களில் எதிர்பாராத நிலையின் சிக்கல்கள் தோன்றுகின்றன. பெண் என்பவள் பொறுமை நிறைந்தவளாகவும் கணவன் செய்யும் தவறுகளை மன்னித்து அவனுடன் வாழும் குணம் படைத்தவள் என்பதை தமிழ்மகன் புதினங்கள் எடுத்துக்காட்டுகிறது.

அடிக்குறிப்பு

1. அ.மு.பரமசிவானந்தம், சமுதாயம் பண்பாடும், ப.3.
2. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.252
3. மு.வ.நல்வாழ்வு, ப.80.
4. இலக்குமிரதன் பாரதி, நமது சமூகம், ப.11.
5. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 8, சமூகச்சிக்கல்கள், ப.520.
6. மேலது, ப.520.
7. தமிழ் இலக்கியத்தில் சமுதாயச்சிந்தனைகள், ப.4.
8. வாழ்வியற் கலைகளஞ்சியம், ப.8.
9. தொல்.பொருள், பா.96.
10. பிரபஞ்சன், வசந்தம் வரும், ப.6.

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர்,
... தொல்காப்பியம் சொல்லதிகாரம்,
சாரதா பதிப்பகம்,சென்னை.
19ம் பதிப்பு, ஜீன் 2005.

2. இலக்குமிரதன்பாரதி.சோ.,
... நமது சமூகம்,
பழனியப்பா பிரதர்ஸ், முதற்பதிப்பு, 1969.

3. சக்திவேல்.சு.,
... நாட்டுப்புறவியல் ஆய்வு,
மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,
முதற்பதிப்பு - 1992.

4. பரமசிவானந்தம்.அ.மு.,
சமுதாயத்தத்துவம்,
தத்துவமையம்,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை, 1987.

5. பிரபஞ்சன்,
வசந்தம் வரும்,
மணிவாசகர் பதிப்பகம்,சிதம்பரம்,
முதற்பதிப்பு - 1992.

6. முருகேசன்.ச.,
தமிழ் இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள்,
திருக்குறள் பதிப்பகம்,
முதற்பதிப்பு, மே, 2007.

7. வரதராசனார்.மு.,
... நல்வாழ்வு,
தாயகம், மயிலாப்பூர், சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1998.

8. வாழ்வியற் களஞ்சியம்,
தொகுதி 7, 8
தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988,

❑❑❑

# திருமூலரின் நெறி ஆளுமை

ப.கார்த்திக்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

**ஆய்வுச்சுருக்கம்**

சைவசமயம் குறிப்பிடும் நான்கு வகை நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறிகளைச் சுட்டும் திருமூலர் புறவழிபாட்டு நெறிகளைவிட அகவழிபாட்டு நெறிகளையே மேன்மையுடையதாக வலியுறுத்துகிறார். இந்நால்வகை நெறியில் உலகஉயிர்கள் பிறவா பேரின்பத்தைப் பெறுவதற்கு எளியவழியினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகஅமைகிறது.

**முன்னுரை**

ஆளுமை என்புத பலநிலைகளில் உள்ளது மனிதனின் ஒவ்வொரு செயலும் அவனது ஆளுமைக்கு உட்பட்டதாகும். ஆளுமைக்குரிய கருவிகள் மெய், வாய், மூக்கு, கண், செவி என்பனவாகும். இதனையே ஐம்பொறிஎன்பர். இவ்வைந்து ஆளுமை அரசியல், சமூகம், வாழ்வியல் எனபல நிலைகளில் அமையும். இறைசக்திக்கு மனிதஉறவுக்கும் இடையில் அமைந்த உறவுநெறி பக்திநெறி எனப்படும். பக்திநெறியைத் தமிழ் உலகிற்கு வழங்கியசித்தர் பரம்பரையில் முதன்மையும், தொன்மையும், வாய்ந்தவர் திருமூலர். 'சித்தாந்தத்தின் தந்தை' எனப் போற்றத்தக்கவர். முதன்முதலில் 'சித்தாந்தம்' என்ற சொல்லைத் தமது திருமந்திரத்தில் எடுத்தாண்டவரும் இவரே. இவரால் பாடப்பட்ட திருமந்திரப் பாடல்கள் பத்தாம் திருமுறையாகத் திகழ்கின்றன. இப்பத்தாம் திருமுறையில் இறைவழிபாடு பற்றிய செய்திகள் அதிகமாகக் காணக்கிடக்கின்றன.

சைவசமயம் குறிப்பிடும் சரியை, கிரியை, ஞானம், யோகம் எனும் நால்வகை நெறிகளையும் சுட்டும் திருமூலர், இறைவழிபாட்டில் புறவழிபாட்டு நெறிகளைவிட அகவழிபாட்டு நெறிகளையே மேன்மையுடையதாக வலியுறுத்துகிறார். இன்றையகாலச்சூழலில் அகவழிபாடு எந்த அளவிற்குச் சமுதாயத்திற்குப் பயன்படுகிறது என மதிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வழிபாடு விளக்கம்**

மனத்தை இறைவனிடம் வழிப்படுத்துவது வழிபாடாகும். வழிபாடு என்பது ஒருசடங்கு. இது உயிர்ப்புள்ளமுயற்சி. அறிவார்ந்த ஆள்வினை. மனிதன் எண்ணுதல், நினைத்தல் ஆகிய அகநிலைப் பயிற்சி மூலம் ஆன்மா தன்னை உயர்த்திக் கொள்ளத் துணைசெய்வது வழிபாடு. குறைபாடுள்ள உயிர்கள் உயர்ந்த தன்மை அடைய முயல்வதற்கு வழிபாடு இன்றியமையாதது. உயிர்கள் தன்னிச்சையான போக்குகளை நிறுத்தி, நன்னெறியில் மனதைச் செலுத்துதலே வழிபாட்டின் அடிப்படை.

**திருமூலரின் வழிபாட்டு ஆளுமை**

சைவசமயத்தின் பரம்பொருளாகிய சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் நாயன்மார்களில் திருமூலரும் ஒருவர். இவர் பதினெண் சித்தர்களில் ஒருவராகவும் கருதப்படுகிறார், திருமூலரின் பத்தாம் திருமுறையில் சிவவழிபாட்டை சிவநெறி என்றும் சைவநெறிஎன்றும் கூறலாம். சிவவழிபாட்டைப் பற்றியும் அதன் சிறப்பைப் பற்றியும் கூறும் திருமூலர் இறைவனின் அருளால் மானிடப் பிறப்பெடுத்த ஒவ்வொரு ஆன்மாக்களும் இறைவனை எண்ணி அவன் தாள் வணங்கி அவனைச் சரணடைவதையே நோக்கமாகக்

கொள்ளவேண்டும் கர்மவினைப் பயன்கள் காரணமாகப் பிறப்பெடுத்தநாம் கர்மவினைகளை ஒழித்துமீண்டும் பிறவா பேரின்பநிலையை அடைவதற்கு திருமூலர் நான்கு வழிகளைப் பற்றி போதிக்கிறார்.

**சைவநாற்பாதங்கள்**

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு முறைகளில் இறைவனை அடையலாம் என்றும் இந்தநான்கு வழிகளை சைவ நாற்பாதங்கள் என்றும் குறிப்பிட்டு மிக எளிமையான இந்தவழிகளால் ஈசனை பற்றிக்கொண்டு பிறவிப்பயனை அடையலாம் என திருமூலர் குறிப்பிடுகிறார்.

கோயிலில் வழிபாடுகள் செய்து சரியைநெறியில் நின்று சிவனிடம் பத்திசெய்பவர்கள் பக்தர் என்றும், கிரியை வழியில் நின்று சிவசாதனங்களை அணிந்து கொண்டு சிவவேடம் தாங்குபவர் தொண்டர் என்றும், அட்டாங்க யோகநெறியை உணர்ந்து தூய நெறியில் நிற்பவர்களைத் தூய யோகியர் என்றும், சிவத்தை தனக்குள்ளே கண்டு அதனுடன் ஒன்றி நிற்பவர்கள் அனைவரும் சிறந்த சித்தர் என்றும் குறிப்பிடுகிறார். இப்பத்தியின் வகைகளை,

“பத்தர் சரிதைபடுவோர் கிரியையோர்
அத்தகுதொண்டர்அருள் வேடத்துஆகுவோர்
அத்த இயமாதிசாதகர் தூயேகர்
சித்தர்சிவஞானம் சென்றுஎய்துவோர்களே.”

(பா. எண் 1446)

என்னும் பாடல் வழி விளக்குகிறார்.

இறைவனின் திருவடிப் பேற்றிற்குநேர் வழியாயுள்ள நான்கினுள் நேர்ந்திடும் அடிப்படைச் சீலம் என்னும், சரியைநெறி எத்தன்மைத் தென்று ஆய்ந்தவர் கந்துருகாலாங்கி முனிவரும் கஞ்சமலையமான் முனிவரும் அவ்விருவரையும் நோக்கி திருமூலர் அருளுகின்றார். இச்சீலம் இந் நிலஉலகத்துத் தனிமுதற் சிவநெறியாகிய சுத்தசைவத்துக்கு ஆராய்ந்து கடைப்பிடிக்கும் உயிராம் என்று உயிர் நானெறித் தொண்டு என்றுரைக்கிறார். இதனை,

“நேர்ந்திடு மூலை சரியைநெறியிதென்று
ஆய்ந்திடும் காலாங்கிகஞ்சமலையமான்
ஓர்ந்திடும் கந்துருகேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சுத்தசைவத் துயிரதே.”

(பா. எண் 1443)

என்றப் பாடலின் வழி சரியைநான்கு பிரிவுகளைஉடையதுஎன்கிறார் திருமூலர்.

சரியையில் சரியை - திருக்கோயிலில் இறைவனை அடைவது - சரியையில் கிரியை எல்லோருக்கும் எப்போதும் தொண்டு செய்து வாழ்தல் - சரியையில் யோகம் ஈசனை வணங்கி தியானிக்கும் போது உண்டாகும் ஆன்மபலத்தால் பிறஉயிர்களை அனுகிரகித்தல் - சரியையில் ஞானம் ஆழ்ந்தபத்தியால் உண்டாகும் ஞானநிலையில் இறைவனை தரிசித்தல் .

சரியை என்ற வழியில் ஈசனை அடைந்த மகாஞானி திருநாவுக்கரசபெருமான். இவரேசரியை வழி பத்திக்கு மிகச் சரியான உதாரணமாவார்.

**கிரியை**

கிரியை சற்புத்திர மார்க்கம் மிகச்சரியான வழிமுறைகளுடன் பூஜைகள் செய்து இறைவனை அடையும் முறையே கிரியை குருமார்களின் வழியே தீட்சைப் பெற்று பூஜைகளைச் செய்வித்தல் மனதாலும் உடலாலும் எப்போதும் ஈசனை பூஜித்துக் கொண்டே இருத்தலுமாகும்.

கிரியையில் சரியை - பூஜை பொருட்களை அளித்தல் - கிரியையில் கிரியை நியமநிஷ்டையுடன் இருவேளை பூஜித்தல்- கிரியையில் யோகம் மனதில் எப்போதும் இறைவனை பூஜித்தல் - கிரியையில் ஞானம் முறையான பூஜையின் வழி பெறப்படும் ஞானத்தால் மற்றவர்களுக்கு உபதேசித்தல் ஞானசம்பந்தப் பெருமான் கிரியை வழியில் இறைவனை பூஜித்த மகாஞானி என போற்றப்படுகிறார்.

**யோகம்**

யோகம் சகமார்க்கம் ஆழ்ந்ததவத்தால் சிவனோடு கலந்து அவரோடு தோழமை கொண்டு மேற்கொள்ளும் தவவாழ்வை யோகமார்க்கம், நியமம், ஆசனம், பிரணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, ஆகிய எட்டுநிலைகளில் படிப்படியாக தேர்ச்சி பெற்று ஈசனை அடையும் முறையே யோகம். யோகத்தில் சரியை –தினசரி வாழ்வுக்கான உடல் மற்றும் மனப் பயிற்சிகள் -யோகத்தில் கிரியை இறைவனை வணங்கும் எளியபூஜைகள் - யோகத்தில் யோகம் ஆழ்ந்ததியானம் - யோகத்தில் ஞானம் ஈசனோடு கலந்துவிடும் சமாதிநிலை. தம்பிரான் தோழன் சுந்தரமூர்த்திபெருமான் ஈசனோடு தவத்தால் கலந்து வாழ்ந்தவர் அவரே யோகமார்க்கத்தில் சிறப்பானவர்.

**ஞானம்**

ஞானம் -சன்மார்க்கம் மேற்கூறிய எல்லா வழிகளிலும் ஈசனை வணங்கிய ஒருவர் இறுதியாக எங்கும் நிறைந்த பரப்பிரம்மமே ஈசன் என்பதைத் தெளியும் நிலையே ஞானமார்க்கம் ஈசனோடு குருவாக வந்து உபதேசிக்கும் நிலையிலேயே ஞானமார்க்கம் கூடும் என்கிறார்கள் பெரியோர்கள். சிந்தித்தல், கேட்டல், புரிந்து கொள்ளுதல், நிஷ்டையில் கலத்தல், என்ற நான்கு வழிகளில் ஞானம் கூடும் தாயுமானசுவாமிகள் இந்த மார்க்கத்தை"கனி" என்று சிறப்பித்துப் பாடினார். ஞானத்தில் சரியை- ஞானத்தைக் குருவிடம் கேட்டல்- ஞானத்தில் கிரியை –ஞானமே வடிவான குருவைத் தரிசித்து அவரின் போதனைகளைச் சிந்தித்தல் -ஞானத்தில் யோகம் -சதாசிவனைப் பற்றியே சிந்தித்தல் தெளிதல் -ஞானத்தில் ஞானம் ஞானநெறியால் இறைவடிவத்தைக் காணுதல். திருப்பெருந்துறையில் குருவைக் கண்டுஞானம் அடைந்த மாணிக்கவாசகப் பெருமான் ஞானமார்க்கத்தில் ஈசனை அடைந்த மகாஞானி.

**முடிவுரை**

சரியையில் சதாசிவன் சடவடிவாய் நிற்பான் கிரியையில் மந்திரத்தின் மறைபொருளாய் மலர் ஓங்கி உயர்ந்த யோகத்தில் உள்ளொளியாய் நிற்பான். ஞானத்தில் தாளாகி இரண்டறை கலப்பான் என்ற திருமந்திரசாரத்தின்படி இறைவனை அடையும் வழி எதுவானாலும் வந்த இடத்தை அடைவதே இன்பம். எங்கும் நிறைந்த ஈசனை சைவநாற்பதங்கள் நான்கில் எதுவிருப்பமோ அந்தவழியில் அடைவோம். பிறவா பேரின்பத்தைப் பெறுவோம்.

**அடிக்குறிப்புக்கள்**

1. பன்னிருதிருமுறைகள் பா.1446
2. மேலது.பா.1443

**துணைநூற்பட்டியல்**

1. சிதம்பரம்.அ., - திருமந்திரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 79,பிரகாசம் சாலை, சென்னை-1, முதற்பதிப்பு - ஆகஸ்டு1942.
2. பாலூ கண்ணப்பமுதலியார் - தமிழ் மந்திரம், வானதிபதிப்பகம், தி.நகர்.சென்னை -17, இரண்டாம் பதிப்பு– ஜீலை1979.
3. மாணிக்கம்.அ., - பன்னிருதிருமுறைகள், வர்த்தமானன் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு - டிசம்பர்1982.

❑❑❑

# பாரதியாரின் ஆளுமை

பா. விக்னேஷ்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

ஆய்வுச்சுருக்கம்

பாரதியாரின் ஆளுமை என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் முன்னுரை அன்பு, தமிழ், புலவர்களை வென்றவர், பெண்மையைப் போற்றியவர் போன்ற துணைத்தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டுரையின் நிறைவாக தொகுப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

ஆளுமை என்பது உள்ளத்தாலும் எண்ணத்தாலும் செயலாலும் தீர்மானிக்கப்படுவது. இது, இரு கூறுகளை உடையது ஒன்று தன்னைத்தானே ஆளும் திறன் மற்றொன்று மற்றவர்களை ஆளும் வல்லமை. ஆளுமை உணர்வு அனைத்து உயிர்களிடமும் காணப்படுகிறது. அறிஞர் யுங் முழுமையான ஆளுமையை தற்பவம் என்று கூறுகிறார். ப்ராய்டு ஆளுமையை நடத்தையிலும் (behaviourism) ஆளுமையிலும் இயைபுத்துறைகள் (associates) என்கிறார்.

எழுத்து வேறு வாழ்க்கை வேறு என்று இல்லாமல் தன் வாழ்க்கையையே எழுத்தாகவும், எழுத்தையே தன் வாழ்க்கையாகவும் கொண்டு வாழ்ந்தவர் பாரதி. தன் மக்களின் எதிர்கால வாழ்வு எப்படி இருக்கும் என்று சித்தரித்தவர். தமிழ் மக்களின் குறைகளை எல்லாம் எடுத்துக் கூறி அவற்றை ஒழிக்க வழியினைக் கூறியவர். தமிழ் மக்களின் முன்னேற்றப் பாதையில் கண்ட தடைகளைத் தூக்கி எறிந்து பாதையைப் புதுப்பித்தவர் பாரதி. பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாதை அமைத்தவர். அனைத்து உயிர்களும் அன்பில் திளைக்க வேண்டும் என்று கனவு கண்டவர்.

## அன்பு

வள்ளலார் அனைத்து உயிர்களிடமும் அன்பு வேண்டும் என்கிறார் பாரதி விநாயகர் நான்மணி மாலையில் இறைவனிடம் வேண்டும் போது,

"பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்,
கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்,
மண் மீதுள்ள மக்கள்,பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு,மரங்கள்,
யாவுமென் வினையால் இடும்பை தீர்த்தே
இன்பமுற் றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும், தேவ தேவா"
(விநாயகர் நான்மணி மாலை, பாரதியார் கவிதைகள்)

என்ற வரிகளில் யாரும் உரைக்காத பொருளைப் பற்றி நான் உரைப்பதற்கு முன் வந்தேன். யாரும் வேண்டாத வரங்களை நான் வேண்டிக் கேட்கவும் முன் வந்தேன், இந்த நிலத்தின் மேல் வாழும் மானிடர்கள், பறவைகள், மிருகங்கள், பூச்சிகள், புல், பூண்டு, தாவரங்கள், மரங்கள் என அனைத்தும் என் செயலால் துன்பம் நீங்கி, மகிழ்ச்சியோடு அன்பு செலுத்தி, ஒற்றுமையாக வாழ்ந்திடச் செய்ய நீ அருள் புரிய வேண்டும் என்கிறார்.

அன்புஉடையவர்கள் ஆனந்தமாக வாழ்வர் என்பதை,

"செய்க தவம்!செய்த தவம்!நெஞ்சே! தவம் செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம் வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை அன்புடையார்

இன்புற்று வாழ்தல் இயல்பு"

(விநாயகர் நான்மணி மாலை, பாரதியார் கவிதைகள்)

மனமே! தவம் செய் தவம் செய் அவ்வாறு தவம் செய்தால் அடைய ஆசைப்பட்டதை அடையலாம் உலகத்தில் அன்பிற்கும் மேலான தவம் இல்லை அன்பு கொண்டவர்கள் ஆனந்தமாக வாழ்வர் என்கிறார்.

தமிழ்

பாரதி தனது பிறப்பைப் பற்றிச் சொல்லும் போது

"ஆதி சிவன் பெற்று விட்டான் என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை மேவும்
இலக்கணஞ் செய்து கொடுத்தான்"

(தமிழ்த்தாய், பாரதியார் கவிதைகள்)

உலகின் முதல்வனான சிவபெருமான் என்னை ஈன்றெடுத்தான் மாந்தருள் மேன்மை மிக்க அகத்தியன் என்னும் அந்தணன் என்னைப் பார்த்து ஆனந்தம் அடைந்து சிறப்புப் பொருந்திய இலக்கண விதிகளை உருவாக்கிக் கொடுத்தான் என்கிறார்.

பாரதி தமிழ் மொழியின் சிறப்பினைப் பற்றி சொல்லும்போது 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்ற வரியில் சொற்களில் மேன்மை மிக்கது தமிழ்ச் சொற்களே என்கிறார் கவிதைக்குயில் பாரதி.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்."

நான் கற்றறிந்த மொழிகளில் தமிழ் மொழிபோல இனிமையான மொழியை வேறு எங்கும் பார்க்கவில்லை எனவும்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

(தமிழ், பாரதியார் கவிதைகள்)

நான் கற்று உணர்ந்த நூல்களை எழுதிய கவிஞர்களின் கம்பரைப் போல திருவள்ளுவரைப் போல இளங்கோவடிகள் போல இந்த உலகின் எங்குமே தோன்றியதில்லை நான் கூறுவது உண்மை வீணான புகழ் வார்த்தைகள் அல்ல என்கிறார்

செழுமை பெற்று வாழ வேண்டுமெனின் தெருவெங்கும் தமிழ் முழக்கத்தை ஒலிக்கச் செய்து வளமடையச் செய்ய வேண்டும் என்பதை.

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்"

(தமிழ், பாரதியார் கவிதைகள்)

என்ற வரிகளால் உணர்த்துகிறார்.

தமிழ் மொழியின் பெருமைகளை பற்றி

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

(தமிழ், பாரதியார் கவிதைகள்)

என்ற வரிகளில் பாரதியார் தமிழ்க் கவிஞர்கள் என்றும் அழியாத புகழ் உடைய புதிய புதிய நூல்களைத் தமிழ் மொழியில் உருவாக்க வேண்டும் என்கிறார்.

புலவர்களை வென்றவர்

பாஞ்சாலி சபதத்தில் பாரதி கலைமகளின் முழு வடிவழகை ஓரிடத்தில் வருணிக்கிறார்.

"வேதத் திருவிழியாள் -அதில்
மிக்கபல் லுரையெனும் கருமை யிட்டால்
சீதக் கதிர்மதியே நுதல்
சிந்தையே குழலென்றுடையாள்,
வாதத் தருக்க மெனும் -செவி
வாய்ந்தநற் றுணிவெனுந் தோடணிந்தால்,
போதமென் நாசியினாள் - நலம் பொங்கு
பலசாத்திர வாயுடையாள்"

(பாஞ்சாலி சபதம், பாரதியார் கவிதைகள்)

கலைமகள் வேதங்களை இரண்டு கண்களாகக் கொண்டவள். அக்கண்ணில் பலவித வேதநூல்களுக்கான விளக்கவுரைகளையே கருமைநிற மையாகத் தீட்டியவள். குளிர்ந்த

ஒளியினையுடைய சந்திரனையே நெற்றியாகவும் சிந்தனைகளையே அடர்ந்த கூந்தலாகவும் கொண்டவள். தர்க்க சாஸ்திரம் என்னும் செவிகளில், சித்தாந்த முடிவு என்னும் தோடு அணிந்தவள். ஞானத்தையே மிருதுவான நாசியாகவும், நன்மைகளை மிருதியாக வழங்கும் சாத்திரங்களையே வாயாக உடையவள் எனவும்

"கற்பனைத் தேனிதழாள் -சுவைக்
காவிய மெனுமணிக் கொள்கையினால்
சிற்ப முதற் கலைகள் -பல
தேமலர் கரணமெனத் திகழ்ந்திருப்பாள்
சொற்படு நயமறிவார்- இசை
தோய்ந்திட தொகுப்பதின் சுவை யறிவார்
விற்பனத் தமிழ்ப் புலவோர் -அந்த
மேலவர் நாவெனும் மலர்ப்பதத்தாள்."

(பாஞ்சாலி சபதம், பாரதியார் கவிதைகள்)

எனும் கற்பனைத் தேன் சுரக்கின்ற உதடுகளை உடையவள் சுவைகள் நிரம்பிய காப்பியங்கள் எனும் அழகான இரு கொங்கைகளை உடையவள். சிற்பம் முதலான பல கலைகளையும், தன் தேன்மலர் போன்ற திருக்கரங்களாகக் கொண்டவள், சொற்களின் சுவையையும், அச்சொற்களை இசை பொருந்த கவிதையாக்குவதன் சுவையையும் நன்கு உணர்ந்த வித்தகர்கள் தமிழ்க் கவிஞர்கள் ஆவர். அத்தகைய மேன்மக்களின் நாவையே தன் இருப்பிடமலராக் கொண்டவள். பாரதியின் இவ்வரிகள் அவரின் இலக்கியம் பற்றிய பார்வையை வெளிப்படுத்துகிறது.

## பெண்மையைப் போற்றியவர்

ஆண்-பெண் சமத்துவமே அறம் என்று தெரிகிறதா? வாருங்கள்! மாதர்களை விடுதலை செய்வோம் என்று அழைக்கிறார் பாரதியார்

"பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!

(பெண்மை வாழ்க, பாரதியார் கவிதைகள்)

பெண்மை வாழ்க என்றும், வெல்க என்றும் கூறி ஆனந்த நடனமிடுவோமடா என்கிறார்.

மேலும்,

"வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா?
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்களறமடா?
கைகள் கோர்த்துக் களித்து நின்றாடுவோம்."

(மேலது)

நமக்கு ஆற்றலைக் கொடுப்பது அன்னையின் தாய்ப்பால் எனவும். நமக்கு தன்மானத்தைத் கொண்டுவருவது மனைவியுடைய சொற்கள் எனவும். தீயசக்திகளைப் போக்குவது மாதர்கள் மேற்கொள்கின்ற அறநெறிகள் ஆகும். எனவே நாம் நமது கரங்களைச் சேர்த்துக்கொண்டு ஆனந்த நடனமாடுவோம் என்கிறார். பாரதி கனவு காண்கிறார்

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"
(பெண்கள் விடுதலைக்கும்மி, பாரதியார் கவிதைகள்)

உலகில் ஆட்சி அதிகாரங்களைக் கொள்வதும், சட்ட வரையறைகளை நிர்ணயம் செய்வதுமாகிய இவற்றை எல்லாம் மங்கையராகிய நாங்களே மேற்கொள்வதாக வந்தோம் என்கிறார். பாரதியின் கனவு இன்று நனவாகி வருகிறது. பெண்கள் தற்காலத்தில் கல்வி, அரசியல், தொழில்துறை, சட்டம் என அனைத்துத் துறைகளிலும் ஏற்றம் உடையவர்களாகத் திகழ்கிறார்கள்.

## முடிவுரை

எழுத்து வேறு வாழ்க்கை வேறு என்று இருப்பவர்கள் மத்தியில் தன்னுடைய வாழ்க்கையை எழுத்தாக்கும் வாழ்க்கையைக் கொண்டவர். எனவே நமக்குத் தொழில் கவிதை என்ற ஆளுமையை தன் படைப்புகளில் வெளிப்படுத்தியவர் பாரதி என்றால் அது மிகையல்ல.

## துணைநூற் பட்டியல்

1. பாரதி வழி - ப. ஜீவானந்தம்
2. பாரதியார் கவிதைகள் - முனைவர் சு. உஷாராணி

# அம்ருதா இதழ்ச் சிறுகதைகளில் காணலாகும் உத்திகள்

பொ. பிரியா
பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர்
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

**ஆய்வுச்சுருக்கம்**

அம்ருதா இதழ் சிறுகதைகள் சமுதாய சிக்கல்கள் தொடங்கி பல்வேறு சிக்கல்கள் குறித்து பதிவு செய்கின்றது. எனவே அம்ருதா சிறுகதைகளில் பயன்படுத்தியுள்ள உத்திகள் குறித்து ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

**முன்னுரை**

நம் வாழ்வில் காணலாகும் பல்வேறு நிகழ்வுகளை மையமிட்டு அமையும் ஒரு இலக்கிய வகை சிறுகதையாகும். உள்ளூர் தொடங்கி உலகளாவி இடம்பெறும் பல்வேறு சிக்கல்கள் குறித்த கதைக்கருவை அடிப்படையாக கொண்டு அம்ருதா இதழ் சிறுகதைகளை வெளியிட்டு வருகிறது. அம்ருதா இதழில் வெளிவந்த (குடை,கனவுகளை விற்பனை செய்து வருபவனின் நினைவுக் குறிப்புகள், அவள், கசிவு, பத்தினி இலை) ஆகிய சிறுகதைகளில் காணலாகும் உத்திகள் குறித்து அறிவதே நோக்கமாகும்.

**உத்திகள் -விளக்கம்**

மனித வாழ்க்கையை பிரதிபலித்து காட்டும் ஒருஇலக்கிய வகை சிறுகதையாகும். அத்தகைய சிறுகதைகளின் பணி மிகவும் குறிப்பிடத்தக்கது. சிறுகதைகளின்றி இலக்கிய வடிவங்கள் இல்லை எண்ணும் அளவிற்கு சிறுகதைகள் மக்கள் மத்தியில் உயரிய இடத்தை பெற்றிருக்கின்றது. அன்றாட வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகளை சிறுகதை வடிவில் எடுத்துரைக்கும் போது பலவகை சிறுகதை உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகையால் உத்திகளின் விளக்கம் குறித்து அறிவது இவ்விடத்தில் அவசியமாகின்றது.

"பொதுவாக தான் கூற வந்த செய்திகளை உள்ளடக்கத்தை வெளிபடுத்தும் முறை உத்தி எனலாம்" (திறனாய்வும் தமிழ் இலக்கிய கொள்கைகளும்இ ப.273)என்று நா.பிச்சமூர்த்தி கூறுகிறார்.

"ஆங்கிலத்தில் டெக்னிக் எனும் சொல்லால் இவ்வுத்தி நிலை குறிப்பிடப்படுகிறது ஒரு கலைஞன் தன் துறையின் செம்மையான வெளியீட்டிற்கு பயன்கொள்ளும் ஆற்றலும் ஆக்கமுறையுமாக இது விளக்கம் கொள்கிறது" (கம்பன் இலக்கிய உத்திகள்இ ப.38) என்கிறார் ச.வே.சுப்பிரமணியம்

உத்திகள் குறித்து விளக்கம் தரப்பட்ட நிலையில் அம்ருதா இதழ்ச் சிறுகதைகளில் இடம்பெற்றிருக்கும் உத்திகள் குறித்து அறிவோம்

**கதைத்தலைப்பு உத்தி**

சிறுகதை சிறந்த முறையில் அமைய கதைக்கருவும், கதைத் தலைப்பும் பெரிதும் துணைபுரிகின்றது. " தலைப்பு என்பது கதையின் பெயர் படைப்பாளர் சரியான தலைப்பைத் தேர்ந்தெடுக்கவேண்டும் தலைப்புகள் கதையின் நோக்கத்தையும் போக்கையும் இயல்பையும் கதைமாந்தரையும் சூட்டிக்காட்டும் வகையில் வைக்கப்படுகின்றன. கதைக்கருவை உணர்த்தக்கூடிய தலைப்புகள் பாத்திரங்களின் பெயர்களைக் கொண்ட தலைப்புகள் என உள" (படைப்புக்கலை, ப.116) இவ்வாறு முனைவர் மு.சுதந்திரமுத்து அவர்கள் கதைத்தலைப்பு குறித்து விளக்கம் அளித்திருப்பதை இங்கு குறிப்பிடத்தக்கது.

குடை என்ற இக்கதையில் மனைவின் உழைப்பு, நாம் பயன்படுத்தும் குடையின் உழைப்பு குறித்து ஒப்பிட்டிருக்கிறார் ஆசிரியர். மனைவியின் உழைப்பை விளக்க இக்கதையில் குடை பாடுபொருளாக அமைகின்றது. ஆதலால் இக்கதைக்கு 'குடை' என்று தலைப்பு இடம்பெற்றிருப்பது பொருத்தமாகும்.

கனவுகளை விற்பனைசெய்பவனின் நினைவுக்குறிப்புகள் என்னும் கதையில் இடம்பெறும் சோமு தயாரிக்கும் திரவம் கனவை உருவாக்கும தன்மை வாய்ந்தவையாக இருப்பதாலும், திரவத்தை அருந்திய பின்பு சோமுவுக்கு ஏற்படும் ஆழ் மன உணர்வுகளின் தன்மை காரணமாகவும் இக்கதைக்கு 'கனவுகளை விற்பனை செய்பவனின் நினைவுக்குறிப்புகள்' என்று தலைப்பு அமைந்திருப்பது பொருத்தமாகும்.

அவள் என்ற இக்கதையில் இயற்கைசேதம், இயற்கை பாதுகாப்பு குறித்து பேசப்பட்டிருக்கிறது. இயற்கையை அவளாக குறிப்பிட்டிருக்கிறார் ஆசிரியர். இயற்கையை பாதுகாக்க தவறியதால் அவள் அளவு கடந்த கோபமடைகிறாள். அதன் விளைவால் பெருவெள்ளம் ஏற்பட அவள் காரணமாகியதால் கதையின் தலைப்பு 'அவள்' என்று அமைவது பொருத்தமாகும்.

கசிவு என்ற இக்கதையில் இடம்பெறும் வள்ளித்தாயி மருமகளை ஏற்றுக்கொள்ளாமல் குடும்பத்தைவிட்டு ஒதுக்க நினைத்தாலும் அதை அவள் பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் கொழுந்தன் மீது அளவுகடந்த அன்பையும் பாசத்தையும் செலுத்துவதால் 'கசிவு' என்று தலைப்பு இடம்பெற்றிருக்கிறது.

பத்தினிஇலை என்ற கதையில் தனஞ்செவி பேயை விரட்ட பூசாரி சாணிப்பால் கரைத்து ஊற்றியது, எருக்கங்குச்சியால் அடித்தது போன்ற பல்வேறு சடங்குகளை செய்தாலும் பேயை விரட்ட இயலாத நிலை ஏற்பட்டிகிறது. ஆதலால் பூசாரி பத்தினிஇலை மூலமாக பேயை விரட்டுகின்றார். பேய் விரட்ட காரணமாக அமைந்த 'பத்தினிஇலை' சிறுகதையின் தலைப்பாகவும் அமைகின்றது.

**பின்னோக்கு உத்தி**

பின்னால் நிகழ இருப்பதை முன் உணர்த்துவதும் முன் நிகழ்ந்தவற்றை பின் உணர்த்துவதுமாகிய நிலையே பின்னோக்கு உத்தியாகும்."பின்னோக்கு உத்தி என்பது படைப்பிலக்கியத்தில் முன்னர் நடந்த நிகழ்ச்சிகளைக் காட்ட அமைக்கப்படுகிறது. பெரும் காலப்பரப்பில் நடந்த கதையைத் தொடக்கத்திலிருந்து வரிசையாக அடுக்கடுக்கான நிகழ்ச்சியைச் சொன்னால் அவை துண்டு துண்டுதுண்டாகவே நின்று கதையின் உருவம் அமைய வாய்ப்பிருக்கிறது. எனவே கதையின் உருவச்சிறப்பிற்கு இவ்வுத்தி உதவுகிறது." (மேலதுஇ ப.107) என்று பின்னோக்கு உத்தி குறித்து முனைவர்.மு.சுதந்திரமுத்து கருத்துரைத்து இருப்பதை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

கனவுகளை விற்பனை செய்பவனின் நினைவுக்குறிப்புகள் இடம்பெறும் பூங்குழலி மீது சோமு சிறுவயதில் காதல்கொண்டதுஇ சாம்பமூர்த்தியும் நாகலட்சுமியும் கள்ளக்காதல் கொண்டதுஎன அனைத்து நினைவுகளும் சோமுவிடம் சூழ்ந்தது."காளியைப் பற்றி யோசிக்கும் போதெல்லாம் சோமுவுக்கு நாகலட்சுமியின் நினைவு வந்துவிடுகிறது. எப்படியாவது இது போன்ற நினைவுகளை மறந்துவிட வேண்டும் என்று எத்தனையோ முறை இவன் யோசித்துமிருக்கிறான். ஆனாலும் ஒவ்வொரு முறையும் அவளின் நினைவுகள் சங்கலியின் அடுத்த கன்னியாக மாறி நீளவே செய்கிறது" (அம்ருதாஇ மார்ச் 2013. ப.18) ஆனால் இத்தகைய நினைவுகளிலிருந்து மீண்டு வர இயலாமல் போனது.

**முரண் உத்தி**

முரண்பாடு கதையின் தொடக்கத்திலேயே ஏற்ப்படுத்தப்படுகிறது. கதையோட்டத்தில் அது

விரிக்கப்படுகிறது. ஓர் உச்ச நெருக்கடி நிலையை அடைகிறது. "குறிப்பிட்ட செய்தியை மாறுபாடுடைய அல்லது எதிர்நிலை பொருளைக் கொண்டு உரைப்பது முரண்உத்தி'என்றும்"முரண் என்னும் போது ஒரு பொருட்களை சார்ந்த பல பொருட்களுக்கு இடையே அழுத்தமான வேறுபாடு உடைய இரண்டு பொருட்கள் அல்லது பொருடைய உடைய சொற்கள் என்று தோன்றுகிறது" (கவிதை மொழிஇப.193) என முரண்உத்தி குறித்து செ.வை. சண்முகம் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்.

கதையின் முக்கியப் பாத்திரம் ஒன்றை ஆவலுடன் விழைந்து அது நிகழ நிகழாமலிருக்க சாத்தியக்கூறுகள் இருப்பதுதான் இந்த விளைவு வன்முறை சார்ந்ததாகவோ பகட்டாகவோ இருக்க வேண்டுவதில்லை விழைவின் தின்மையே முக்கியம்

குடை என்ற கதையில் முதன்மை மாந்தராக இடம்பெறும் பக்திபாபு குடையின் உழைப்பை புரிந்து கொண்டிருக்கவேண்டும் என்று வருந்துகிறார். மனைவி சுதாமயி சோர்வடைந்து இல்லத்தை விட்டு வெளியேற எண்ணினாள். மனைவியின் எண்ணத்தை மாற்ற பக்திபாபு அவரால் ஆன உதவிகளை செய்தார்.

கனவுகளை விற்பனை செய்பவளின் குறிப்புகள் என்ற இக்கதையில் சோமு கொடுத்த திரவத்தின் அடிப்படையில் அனைவருக்கும் கனவு வந்த நிலையில் சோமுவிற்கு மட்டும் சிறுவயது காதல் சாம்பமூர்த்தியும் கௌரியும்கள்ளக்காதல் மேற்கொண்டதன் விளைவால் விட்டை விட்டு வெளியேறியது நாகலட்சுமியின் அப்பா அவளது காதலுக்கு தடையாக இருந்தது குறித்த கனவு வந்தது. அதிலிருந்து மீண்டு வர சோமு எண்ணினான். "அதன் பிறகு அவன் எத்தனையோ முறை அந்த திரவத்தை அருந்திப் பார்த்தான் திருப்பத்திரும்ப அதே துல்லியத்துடன் அந்த கனவு வந்து கொண்டே இருந்தது. தன் மனநிலை குறித்து அவன் பீதியடைந்தான் தனக்கு பைத்தியம் பிடித்துவிடுமோ என்றும் அஞ்சினான் எப்படியாவது இதிலிருந்து வெளிவந்து விட வேண்டும் என்று நினைக்கும் போதெல்லாம் அந்த கனவு அவனை பாடாய்ப்படுத்த ஆரம்பித்தது"(அம்ருதா மார்ச்,2013, ப.19) சோமு சொன்னவாறு அவனது நினைவுகளை மாற்ற முடியவில்லை. கதையிலும் சோமு கூறுவதை போன்ற மாற்றம் நிகழவில்லை.

அவள் கதையில் இடம்பெறும் தாணு அவனுக்கு சொந்தமான வயல்காட்டை, இயற்கையும் பராமரிக்க நினைக்கின்றான் ஆனால் அவனது எண்ணத்திற்குமாற்றாக "சார் கிளம்புங்க எல்லாம் கிளம்பிட்டாங்க வெள்ளம் குவாட்டர்ஸ் புகுந்திடுச்சு போட் வந்திருக்கு வேகமா வெளியே வந்து பார்த்த போது குவாட்டர்ஸில் கனே பரமாய் இருந்தது. டார்ச் லைட்டுகளும் மொபைல்களும் புள்ளிகளாய் வெளிச்சம் காட்டி அங்கும்மிங்கும் அலைந்தன வீட்டைப் பூட்டிவிட்டு கடைசியாக நான் தாணுவுடன் "மணி பன்னிரெண்டே முக்கால்" என்றான் போட்டில் இருந்த மனிதர்கள் டார்ச்சுகளை அடித்து பார்த்துகொண்டிருந்தனர். போட் அஞ்சு நிமிசம் போயிருக்கும் படபடவென்று எங்கோ ஏதோ இடிந்து விடும் சத்தம்"(அம்ருதா. மார்ச்,2013,ப.56) அடர்ந்த மலை பொழிந்தது அதனால் பாலம் உடைப்பு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிக்குள் வெள்ளம் புகுந்தது. வீடுகள் இடிந்து விழுந்தது.

கசிவு கதையில் இடம்பெறும் வள்ளித்தாயின் வசைப்பாட்டை ஏற்காத மருமகள் அவளுடைய வாழ்வில் பெரிய மகன் வந்த சூழலை எடுத்துரைத்து கடிந்து கொண்டாள். எப்படியும் இருவருடனும் (மனைவி, அம்மா) வாழ்ந்து ஆக வேண்டும் என நினைக்கும் மகன் அம்மாவை சமாளிக்க மனைவியை கடிந்து கொண்டான் "ஆமா பெரிய ரசா வூட்டு மக பாரு வரிசியாக் கெடந்தானுங்க இவளத்தான் கட்டிக்கணும்னு...கேக்கப் பாக்க நாதியத்துக் கெடந்தவளுக்கு வாழ்க்க கொடுத்தேம் பாரு என்னச்சொல்லனும்"(அம்ருதா,மார்ச்.2013, ப.62)

பத்தினி இலைகதையில் இடம்பெறும் ரம்யா மீதுள்ள தனஞ்செவி பேயை விரட்ட

சாணிப்பால் ஊற்றுவது. எருக்கங்குச்சியால் அடிப்பது போன்ற மூடநம்பிக்கை சடங்குகளை செய்கிறார். பூசாரி மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் பேயிடம் தோற்றுப்போக கடைசியாக பத்தினி இலையால் பேயை விரட்ட முயற்சிக்கிறார். “ஓகோ வரலாறு இப்படி போவுதா என்று சொன்ன பூசாரி சரி என்ன செய்யலாம்” என்று கேட்டான் “வவுத்து புள்ளயோட என்னெ சாவடிச்சஅவனயும்அவனம்மாவயும் வுடமாட்டன்” நீவுட்டுத்தான் ஆவனும் இலென்னா பத்தினி இலையில அடிச்சு விரட்டுவேன்” (அம்ருதா. மார்ச்.2013 .ப.38)இறுதியாக பூசாரி பத்தினி இலையால் பேயை அடித்து விரட்டசெய்த முயற்சி வெற்றி அடைந்தது.

### தொடக்கம்

சிறுகதையின் தொடக்கம் மிகவும் விறுவிறுப்பாக அமைய வேண்டும் படிப்பவர் கவனத்தை தூண்ட வேண்டும் மனிதனின் பிறப்பு தொடங்கி வாழ்க்கை நிகழ்ச்சி போன்றோ சிறுகதையின் தொடக்கம் அமையலாம் எனவேசிறுகதையின் தொடக்கம் குறித்து

இக்கதையில் இடம்பெறும் பக்திபாபுவின் குடும்பத்தார்கள் குடையை பராமரிக்க தவறிவிட்டார்கள் ஆதலால் குடை பறந்துசென்றுவிட்டது என்பதையும்இ குடை பறந்து சென்றதது இயற்கைதானே! இதை சரிவர பராமரித்து இருக்கவேண்டும் என்பதை முன்வைக்கும் தொடக்கமாக குடை சிறுகதை “வீட்டிருப்பபவது ஒரேயொரு குடை அதிலே ஐம்பது ஓட்டைகள்.ஓட்டைகள் வழியே தலையிலும் முகத்திலும் விழும் வெயில் ஒளிப்புள்ளிகளைத் தெளிக்கிறது.மழையில் முத்து முத்தாகத் தண்ணீர் கொட்டுகிறது. தலையிலிருந்து இந்த மாதிரி ஒரு குடை தொலைந்து போனால் மனக்கஷ்டம் ஏற்படுகிறது. இயற்கைதானே” (அம்ருதா பிப்ரவரி.2013 ப.49) அமைகின்றது.

கனவை உருவாக்கும் திரவத்தை யாராலும் உற்பத்தி செய்ய இயலாது. அந்த வேலையை செய்து மேனேஜரின் நல்லபெயரை எடுப்பது இயலாத நிலை. அந்நிலை இக்கதை மாந்தர் சோமுவுக்கு ஏற்பட்டுள்ளதை விளக்கும் வகையில் இக்கதை அமைகிறது “ஏன் இந்த வேலையைத் தேர்ந்தெடுத்தோம் என்று முதன்முதலாக நினைக்க வேண்டியிருக்கிறது சோமுவுக்கு கனவுகளை உருவாக்கும் திரவத்தை விற்பனை செய்யும் ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதி பணியில் சேர்ந்த ஆறே மாதத்தில் எப்படி தன்னால் உயர் அதிகாரிகளிடத்தில் நல்ல பெயரை தக்கவைத்து கொள்ள முடிந்தது என்று யோசித்து பார்த்தாலும் அவனுக்கு விளங்கவில்லை. எந்த சிக்கலும் இல்லாமல் சென்று கொண்டிருந்த விற்பனை பிரதிநிதி வேலையில் கண்டாச்சிபுரத்தை சேர்ந்த காளிதாஸ் ருபத்தில் அவனுக்கு பிரச்சனை தொடங்கியது.(அம்ருதா.மார்ச்.2013.ப.17)

இயற்கையின் அழகு நிறைந்த சூழலை ஆசிரியர் எடுத்துரைக்கும் வகையில் தொடக்கம் அமைகின்றது. ரிவர்வியூ அழகாத்தான் இருந்தது. பிறந்த குழந்தையின் முதல் சிரிப்பு போல உதயமாகிக் கொண்டிருந்த சூரியனின் ஒளிக்கதிர்கள் பட்டு சுத்தியிருந்த வயல் எல்லாம் பொன்னிறமாக மின்னிக்கொண்டிருந்தது.(அம்ருதா மார்ச்.2013.ப.54)

மகனின் மீதுள்ள அக்கரையும் பாசத்தையும் வெளிப்படுத்தும் வகையில் தாயின் உரையாடல் அமைவது போல கதை அமைக்கப்பட்டிருக்கிறது. “நாயோட வாலுர புடிச்கட்டிவிட்டாப்புலல்ல இந்தப்பய நாலு தெரு சுத்தறான் எதுக்குற்கறே ஓண்ணுத்துக்கும் பிரயோசனமில்ல. சும்மாச்சும்மா தெரு அளந்துட்டு திரியுறான் நீ ஒருக்காப்போய் தேடிப்பார்த்து வாயேன் ராசா காலைல வெளிய இறங்கினவ பசிதாங்க மாட்டானே புள்ள”

தனஞ்செவியை திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றிய சேகரின் செயலை கண்டிக்கும் வகையில் அமையும் பேயின்

செயல்பாடு அமைகிறது. அதை கண்டு அதிர்ச்சியடைந்த சேகரின் மனக்குமுறலை எடுத்துரைக்கும் வகையில் தொடக்கம் அமைகின்றது.

கண்ணாலத்துக்கு மின்னாடி நம்ப மேற்கால தெரு ஓத்தகண்ணன் மவ தனசெவ்விய வச்சியிருந்தன்னு யாரோ ஊருல காய டிச்சிட்டு இருக்காங்க அதெ கேள்விப்பட்டு தாலிகட்டுன மூணாம் மாசத்திலிருந்து கோலம் கட்டி அடிக்கிறா ஊர சிரிக்க வைக்கிறா ஊருல என்னெ பங்கப்பட வைக்கணும் அதான் அவ ஆச அதுக்குத்தான் இந்த பேயி புடிச்சிக்கிச்சிங்கிற கூத்து"(அம்ருதா நவம்பர் 2013.ப.33)

## முடிவுரை

கதைக்கருவிற்கு கதைமாந்தர்களுக்கு ஏற்ற நிலையில் சிறுகதை தலைப்புகள் அமைந்த தன்மை குறித்தும், கதாப்பாத்திரங்கள் முன்னாளில் நடந்த சம்பவங்கள் பற்றி நினைவு கூர்ந்த செய்தியை பின்னோக்கு உத்தி மூலமாகவும், கதைமாந்தர்களுக்கு,இயற்கைக்கு, கதை கருவிற்கு முக்கியத்துவம் கொடுத்து தொடங்கிய சிறுகதைகள் குறித்தும், கதை நகர்வதற்க்காக முக்கிய கதாப்பாத்திரம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி முரண் உத்தி வாயிலாக

## துணைநூற்பட்டியல்

1. கம்பன் இலக்கிய உத்திகள், ச.வே. சுப்பிரமணியம், சேகர் பதிப்பகம் சென்னை -1980.
2. கவிதைமொழி, செ.வை.சண்முகம், 31.சிங்கர்தெரு, பாரிமுனை சென்னை
3. படைப்புக்கலை, முனைவர்.மு.சுதந்திரமுத்து, அறிவுப்பதிப்பகம் ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600014.
4. திறனாய்வும் தமிழ் இலக்கிய கொள்கைகளும், நா.பிச்சமூர்த்தி, சக்தி வெளியீடு, சென்னை -இ.ப-1986

# பிரபஞ்சனின் சிறுகதைகளில் படைப்பாளுமை

து. யோககலைவாணி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

## ஆய்வுச் சுருக்கம்

நடைமுறை வாழ்வியல் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மொழியாற்றலால் மக்களின் நல்வாழ்விற்கு மக்களிடையே நற்சிந்தனைகளை உருவாக்கி, நெறிப்படுத்தும் இலக்கியப் பதிவுகளை இலக்கியப் படைப்பாளுமை எனலாம். தொலைந்து போனவள் என்னும் சிறுகதையில் சீத்தாவின் கதாபாத்திரத்தை வெளிப்படுத்துவதால் பிரபஞ்சனின் எழுத்தாளுமையையும், கதையின் மையக் கருவை கூறுமிடத்தில் பேச்சாளுமையும், மாப்பிள்ளை வீட்டாரை பேசுமிடத்து அவரின் தனித்தன்மையினையும், சீத்தாவின் சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை கூறுமிடத்து அவரின் மனிதநேய ஆளுமையும் உணரமுடிகின்றது. இவ்வகையில் தொலைந்து போனவள் என்னும் சிறுகதையின்வழி பிரபஞ்சனின் படைப்பாளுமையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## முன்னுரை

உலகில் எத்தனை கோடி மக்கள் இருந்தாலும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்ளும் அளவிற்கு இறைவன் படைப்பில் அதிசயம் இருப்பதுபோல், தோன்றிய மக்களின் ஏதேனும் ஒரு வகையில் ஆளுமைத் திறனில் உயர்ந்தோ தாழ்ந்தோ இருக்கின்ற தன்மையைப் பார்க்கமுடிகிறது. மேலும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும்போது தோன்றிய ஒவ்வொரு ஊரினமும் அதனதன் வாழ்வை நிலைநிறுத்திக் கொள்வதற்கான தனித்தன்மை வாய்ந்த ஆற்றல் பெற்றிருப்பதை உணரமுடியும் இவ்வகையில் பிரபஞ்சன் சிறுகதையில காணப்படும் படைப்பாளுமையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பிரபஞ்சன் ஓர் அறிமுகம்

சிறுகதை ஆசிரியர் பிரபஞ்சன், தமிழ்மொழியில், மானுடம் மேலாங்கிய பேரன்பு கமழும் சுமார் 200க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். வரலாறு சார்ந்த படைப்பு எப்படி இருக்க வேண்டும் என்கிற புதிய கதவைத் திறந்து வைத்தவை அவருடைய மானுடம் வெல்லும், வானம் வசப்படும் ஆகிய நாவல்கள். ஆண் பெண் உறவை, அதன் மேன்மையையும் சிக்கலையும் இருபதுக்கும் மேலான நாவல்களில் எழுதியவர். அரசியல், கலை, பண்பாட்டுத் துறை சார்ந்த 300க்கும் மேலான கட்டுரைகள் மற்றும் இரண்டு நாடகங்களும் அவர் படைப்பின் அகலத்தையும் ஆழத்தையும் உணர்த்தும். 1947 ஏப்ரல் 27ஆம் நாள் பிறந்த பிரபஞ்சன் 1961ஆம் ஆண்டு எழுதத் தொடங்கினார். பிரபஞ்சனின் படைப்புகள் ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், ஜெர்மனி, பிரஞ்சு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. எழுத்தாளரும், திறனாய்வாளரும் ஆன வைத்திலிங்கம் என்ற பிரபஞ்சன் தன்னுடைய 73ஆம் அகவையில் இயற்கை எய்தினார்.

## ஆளுமை பொருள்

தனிமனிதனுடைய எண்ணங்கள், செயற்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும்முறை, மனப்பான்மைகள் அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும்

சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மை ஆளுமை எனப்படும்.

அவனுடைய உடல் தோற்றமும் அவன் உடைப்பாணியும் நடையும் அவனிடம் காணப்படும் அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம், நன்றியுணர்வு, தந்திரம் போன்ற பலவிதமான பண்புகளும் அவனுடைய ஆளுமையில் அடங்கும். (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி இரண்டு, ப. 678).

ஆளுமை என்பது தனிமனிதனின் உடற்பாங்கு, மனப்பாங்கு, பயன்மதிப்புகள், நாட்டங்கள், மனவெழுச்சிகள், நுண்ணறிவு, ஆற்றிய செயல்கள், ஆற்றல்கள் ஆகியன ஒருங்கிணைதல் முறையாகும். இப்பண்புகளைக் கொண்டு தனிமனிதன் எவ்வாறு தன்னைச் சூழ்ந்தோரிடம் பொருத்தப்பாடு கொள்கிறான் என்பதும் அவன் ஆறுமையைச் சுட்டிக் காட்டுகிறது. (மேலது, ப. 682).

எழுத்தாளுமை

சிறுகதைகளில் மட்டுமின்றி இலக்கியத்தில் எல்லாத் துறைகளிலுமே எழுதப்படுவதில் ஒரு தனித்துவம், ஆசிரியரின் எடுத்தாளுமை இல்லாது போனால் அது உபயோகமற்றதாகும். (இலக்கியத்துக்கு ஓர் இயக்ககம், ப.179).

இவ்வகையில் தொலைந்து போனவன் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள சீத்தாவை பெண் பார்க்க வருவோரின் இயல்பை பெண்ணினத்தை குறைத்து மதிப்பிடுவதாக தன் எழுத்தாளுமை மூலம் வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர்.

சீத்தாவை பெண் பார்க்க வருபவர்கள் இரண்டு வகைப்பட்டவர்களாக இருப்பார்கள். காலை நேரத்தில் வருபவர்கள் மற்றும் மாலை வேளையில் வருபவர்கள். ‘மிக நிம்மதியாகக் காலை பலகாரம் சாப்பிட்டு விட்டு, பெரும்பாலும் ஞாயிறுகளில் பொழுது போக்க வேறு ஒரு காரியமும் இல்லையெனில் அப்படியே தமாசாக சீத்தாவை பெண் பார்க்க வருவார்கள். மாலை வேளைக்காரர்கள், நல்ல சினிமாக்கள் இல்லாத பொழுதிலும், சும்மா சும்மா கடற்கரையா? என்று சலிப்புறுபவர்களும், காலாற நடந்து ஒரு மாறுதலுக்காக வருவார்கள்.

“பெண்கள் சமத்துவ உரிமைப் பற்றி பேசப்படும் நிலையில் இருந்தாலும், பெண்கள் முன்னிலை பெற தடைகள் அதிகளவில் காணப்படுகின்றன. ஏனெனில் பெண்களை இரண்டாம் பட்சமாய் பார்க்கும் ஆணாதிக்கத்தின் பார்வையால் பெண்களைக் குறைத்து மதிப்பிடுவதோடு, அதற்கான காரணமாக வேண்டாத பழிகளைப் பெண்கள் மீதே சுமத்துகின்றனர்’. (ப. கவிதா, ஈ.வெ.ரா. பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள், ப.224).

பெண் என்பவள் திருமணச் சடங்குகள்ள மூலம் தன் சுயமரியாதை இழக்கின்றாள். பெண்ணினத்தையே அவமானப்படுத்துவதைப் போல் நடைபெறும் பெண்பார்க்கும் நிகழ்ச்சியை விமர்ச்சிக்கும் பொருட்டு இவரின் எழுத்தாளுமையை உணரமுடிகின்றது.

படைப்பாளுமை

‘‘நடப்பியல் கோட்பாடு அல்லது எதார்த்தம் என்ற இயக்கம், உள்ளதை உள்ளவாறே காட்டும் கோட்பாடாகும். நடைமுறை வாழ்க்கையை இலக்கியத்தில் அப்படியே படைப்பது நடப்பியலாகும். படைப்பாற்றலையும் இவ்வியக்கவழி உணர்த்த முடியும்” (கா. வாசுதேவன், பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.எ.337).

இவ்வகையில் தொலைந்து போனவள் சிறுகதையில் சீத்தாவுக்கு ஏற்படும் வரதட்சிணைக் கொடுமையை அப்பட்டமாக வெளிகாட்டுவதன் மூலம் பெண் இனத்திற்கு

ஏற்படும் அவலத்தைத் தன் படைப்பாளுமையின் மூலம் அழகாக முன்வைக்கிறார் ஆசிரியர்.

எல்லா மாப்பிள்ளைகளையும் போலத்தான் சீத்தாவைப் பார்க்க வந்த மாப்பிள்ளையும் இருந்தார். அதே விறைப்பும் அதே ஒட்டாத பார்வையுடனும் இருந்தார். மிஸ் சீதாவுக்கு என்ன அடிப்படைச் சம்பளம், நானூற்றைம்பதா? எழுநூறுக்கு மேலேன்னாரே தரகர் என்று அலுத்துக் கொள்ளும் மாப்பிள்ளை.

பண விசயத்தில் மாப்பிள்ளைப் பையன் குறியாக இருப்பது பற்றித் தயங்கினார் பெண்ணைப் பெற்றவர்.

“வாங்குவோர் பொருளுக்கு விலை கொடுப்பது என்பதே காலங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வணிக நியதி. ஆனால் திருமணம் என்னும் சமூக நிகழ்வில் கொடுப்போரை விலையும் கொடுத்தல் என்னும் சமூக இழிவு இந்த நவீன காலத்திலும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது”. (க. சாந்தி, பெண்ணியமும், பாகுபாட்டுச் சிக்கல்களும், நாட்டுப்புறவியல் அணுகுமுறை, ப.119) என்னும் கருத்தால் வரதட்சணை என்பது திருமண வாழ்வியல் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.

‘வரப்போகிறவரைப் புரிந்து கொண்டு அவரிடம் இருக்கிற நல்ல குணத்தை அல்லது கெட்ட குணத்தைப் புரிஞ்சுகிட்டுக் கல்யாணம் பண்ணிக்கிற மாதிரியா நாம இருக்கோம்? கண்ணுக்கு விகாரமான இல்லை ஏதோ சம்பாதிக்கிறார். அதுக்கு மேலே நம்மால போக முடியாதுடி. ஒவ்வொரு சம்பந்தமும் முறிஞ்சு போறப்போ அப்பா எவ்வளவு சங்கடப்படறார்? உனக்கும் வயதாகிறது நான் எதுக்கு நந்தி மாதிரி நடுவில் கிடந்து உன் வாழ்க்கையை மறிக்கணும்’ என்கிறாள் தங்கையிடம்.

இப்படித் தன் ஆசைகளை விருப்பத்தைத் தொலைத்துக் கொண்டு மற்றவர்கள் மனதை நோகடிக்காத, பெண்ணின் மேன்மையான உணர்வுகளை மனிதநேயத்தை எடுத்துச் சொல்லும் விதத்தில் இவரின் மையக்கருதான் ஆளுமை நிலை புலப்படுகின்றது.

## பேச்சாளுமை

“படைப்பாளர் தம் எண்ணங்களை உள்ளார்ந்த வெளிப்பாட்டில் உணர்ச்சி கொள்ள வைப்பதே பேச்சாளுமை எனப்படும். மனதில் பதிக்க விரும்பும் காட்சியை அடிப்படையாகக் கொண்டு ஒரு காட்சி அல்லது பொருள் பற்றிய மனக்கண்ணில் உறைவதாகக் காட்டுவதை பேச்சாளுமை” எனலாம். (வாசுதேவன், கா., பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.எ.338).

இவ்வகையில் தான் முன்வைக்க வரும் கருத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர் பிரபஞ்சன். மாப்பிள்ளை வீட்டாருக்கென்றே சீத்தாவின் இனிப்புப் பலகாரங்களை வாங்கி வந்தான் சீத்தாவின் தம்பி.

‘தேங்காய் பர்பிதானே வாங்கியாந்தே? என்றது அக்கா.

இனிப்புச்சேவு வாங்கியாரலாம்னு நினைச்சேங்கா. . . . நீ கோவிச்சுக்கப் போறியோன்னு பர்பியே வாங்கியாந்துட்டேன்

திங்கவா வர்றாங்க ஒரு மரியாதை ஏதாவது கொடுக்கனும் அவ்வளவுதானே? திடீரென்று எனக்குச் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

எனக்கென்னமோ இந்த இடம் முடிஞ்சுடும்னு தோனுதுக்கா” என்றேன். அக்கா என்னை உற்றுப் பார்த்தது. என்ன காரணத்தாலோ அதன் கண்களில் கண்ணீர் கோத்துக கொண்டது. மை இட்டதுபோல். கண்ணீர், கண்களில் ஓரம் திரண்டது.

உன்வாக்கு பலிக்கட்டும்’ என்றது அக்கா.

பெண் பார்க்கப்படும் பெண்ணின் உணர்வு நிலையை உணரும் இடத்துக்கும், வெறுப்பை ஏற்ற எதிர்க்காப் பேச்சை வெளியிடும் பெண் வீட்டாரின் நிலையை ஆராயும் இடத்தும் இவரின் பேச்சாளுமையை உணரமுடிகின்றது.

முடிவுரை

❖ ஆளுமை என்பது தனிமனிதனுடைய எண்ணங்கள் மற்றும் நடத்தைகள் மூலம் வெளிப்படும் தனித்தன்மையான பண்புகளில் ஒன்று என்பதனையும்,

❖ பெண் என்பவள் தனக்கென ஆசைகளை வகுத்துக் கொள்ளாமல் தன்னைச் சார்ந்தவர்களுக்காக வாழும் மனிதநேயமுடைய மனுசி என்பதனையும்,

❖ பிரபஞ்சன் தான் முன்வைக்க விரும்பும் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறி அதன் மூலம் சமுதாய விழிப்புணர்வு சிந்தனையையும் வாழ்க்கை மாற்றங்களையும் ஏற்படுத்தும் ஆசிரியர் என்பதனையும் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

❖ ஆண்வழித் தாக்கம் என்ற வகையில் ஆடவனின் போக்கு ஆதிக்கப் போக்காக அமைந்திருக்கிறதென்று பெண் உணரத் தலைப்படுகின்ற எல்லையிலேயே பெண்ணின் எதிர்ப்புணர்வு தொடங்கி விடுகின்றது என்ற கூற்றை நிலை நிறுத்தும் பொருட்டும் கதைகள் அமைவதை அறியமுடிகிறது.

❖ மரபுகளும் பண்பாடுகளும் காலங்காலமாக ஒருமுறை மாந்தர்களிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு உரிமையாக்கப்பட்டு வருவன என்ற மரபுவழிச் சிந்தனைகளை காணமுடிகிறது.

❖ மனித உறவுகளால் அமையும் செயல்பாடுகள் ஒவ்வொன்றும் தன்முனைப்பும், முனைப்பின்மை என்பவற்றால் ஆக்கப்படுவதே என்ற மனிதப் பண்புகளுக்கான உளவியல் விளக்கம் பிரபஞ்சன் சிறுகதைகளில் உள்ள படைப்பாளுமையைத் தெள்ளத் தெளிவாக வெளிக்காட்டுகின்றன என்பதையும் அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. கவிதா. ப., ஈவெரா பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள், முனைவர் பட்ட ஆய்வேடு

2. சாந்தி, க., பெண்ணியமும், பாகுபாட்டுச் சிக்கல்களும் நாட்டுப்புறவியல் அணுகுமுறை முனைவர் பட்ட ஆய்வேடு

3. சுப்பிரமணியம், க.நா., இலக்கியத்துக்கு ஓர் இயக்கம், காவ்யா, பெங்களூர்.

4. வாசுதேவன். கா. பன்முகநோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.

5. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி இரண்டு.

❑❑❑

# அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் ஆளுமை வெளிபாடு

ம.காயத்ரி
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

ஆய்வுச்சுருக்கம்

அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் ஆளுமை வெளிபாடு என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் முன்னுரை, வாடை, இரவுக்குறி இடையீடு, அலர், போன்ற துணைத்தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் நிறைவாக முடிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

தமிழரின் தலை இலக்கியமாய், தன்னிகரற்ற செவ்விலக்கியமாய்த் தரணியில் தமிழின் புகழ்பாடும் ஒப்பற்ற படைப்பாய் விளங்குவது சங்க இலக்கியம் ஆகும்.

சங்க இலக்கியத்தைத் தாய்மை இலக்கியம் என்று மொழிவது மிகப் பொருத்தமானது. ஏனெனில் அதுதான் பிற்காலத்தில் இலக்கியத்துக்குத் தலையுற்றாய்த் திகழ்வது இன்னும் தெளிவாகக் கூறுவதாக இருந்தால், சங்க இலக்கியமே தமிழ் இலக்கியத்துக்கு வாய்த்த அடிப்படை இலக்கியம் ஆகும். தமிழ் மண்ணின் மணம் கமழும் தனிப்பெரும் சிறப்பு சங்க இலக்கியத்தின் பெருமை மிக்க அடையாளம் எனலாம்.

அகநானூறு மூன்று பகுதியாக உள்ளது. அவை முறையே களிற்றியானை நிரை, மணிமிடைபவளம், நித்திலக்கோவை என்பதாகும். ஆண் யானையைப் போன்று கம்பீரமாக அசைந்து, அசைந்து செல்லும் இயல்புடைய செய்யுள்களுக்கு களிற்றுயானை நிரை என்றும், மாணிக்கம் போன்ற சொற்களும், பவளம் போன்ற மொழிகளும் கலந்து இயைபும் செய்யுட்களுக்கு மணிமிடைப்பவளம் என்றும், முத்து போன்ற ஒரே வகையான சொற்களால் அமைந்த பாடல்களை நித்திலக்கோவை என்றும் பிரித்துள்ளனர். அகநானூற்று பாடல்களை திணையின் அடிப்படையிலும் எண்முறை ஒழுங்கோடு தொகுக்கப்பட்டுள்ளன. மருதத்திணைப் பாடல்களுக்கென்று வைப்புமுறையானது 06, 16, 26, 36 அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களில் மருதநிலமும் அந்நிலம் சார்ந்த வாழ்வியலும் சிறப்பாகப் பதிவாக்கப்பட்டுள்ளன.

மானுட வரலாற்றில் பேரரசுகளின் தோற்றத்திற்கு ஏதுவாக அமைந்ததும் மருதநிலமே. மருதத்திணைக்கேற்ப முப்பொருள் கோட்பாட்டுத் தன்மையில் பண்டைத் தமிழரின் வாழ்வியல் அமைந்துள்ளன. ஆளுமை என்பது ஒருவருடைய ஒழுங்கமைதியை வெளிப்படுத்தும் பாங்கான எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் ஆகிய பண்பு நலன்களை வெளிப்படுத்தும் செயல்களாக அமைகின்றன. அவ்வகையில் அகநானூற்று மருதத்திணையில் அமைந்த தலைவன், தலைவியின் ஒழுக்கங்களோடு மன்னர்களின் செயல்களும் ஒன்றிய நிலையை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றன.

## வாடை

தான் மேற்கொண்ட வினையை முடித்துத் திரும்புகிறான் தலைவன். இச்செய்தியைக் கேட்ட தலைவி, தன்னை

வருத்திய வாடை இனி தோற்று ஓடும் எனக் கூற வந்தவள். கரிகால் சோழனின் வாகைப் பறந்தலை வெற்றியை உவமை காட்டுகின்றாள். கரிகால் சோழனொடு போர் செய்வதற்கு ஒன்பது மன்னர்கள் வாகைக் களத்தில் ஒன்று கூடி செருக்குடன் நின்றனர். படைவளம் நிறைந்த கரிகால் சோழன் வருகின்றான் என்று கேள்விப் பட்டதும், அவன் முன் நிற்க மாட்டாதவராய், அவ்வொன்பது அரசர்களும் தத்தம் வெண்கொற்றக் குடைகளைப் போட்டு விட்டு ஓடிப் போயினர். இச்செய்தியைத் தலைவி வாடையை நோக்கிக் கூறுவதாய் அமைத்துள்ள பாடலில், வாடையே தருக்குற்று, கொடுமைப்படுத்தும், நீ தலைவன் விரைந்து வந்தால் ஓட வேண்டிவரும். தோற்று ஓடாது பெருமிதமாக இப்போதே ஓடி ஒளிக என்று வாடையது தோல்விக்கு ஒன்பது மன்னர்களின் தோல்வியை உவமை ஆக்கி தலைவி எடுத்துரைப்பதை,

"செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
விரியுளைப் பொலிந்த பரியுடைநன்மான்
.................. .................. ..................
பீடில் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடைநீ எமக்கே"

(அகம்.பா.126:15-22)

என்ற பாடலில் தலைவியின் ஆளுமைப் பண்பு வெளிப்படுகிறது.

வாடை

இரவுக்குறி இடையீடு

களவொழுக்கத்தில் ஈடுபடும் தலைவனும் தலைவியும் பகற்பொழுதில் குறியிடம் அமைத்துச் சந்திப்பர். பகற்குறியில் சந்திக்க இயலாதபொழுது இரவுக்குறியில் சந்திப்பது உண்டு. ஆனால் தலைவன் குறியிடத்திற்குத் தலைவி வர இயலாத நிலையைச் சிறைப்புறத்தானாக நிற்கும் தலைவன் கேட்குமாறு, தான் அடைந்த துன்பங்களைத் தோழியிடம் தலைவி எடுத்துரைக்கும் பாங்கானது ஆளுமைப்பண்பு நிறைந்ததாக அமைகின்றது.

ஆரவாரத்தினையுடைய ஊரில் விழா நடைபெறவில்லை என்றாலும் உறக்கம் கொள்ளாது, ஊர் உறங்கினாலும் உரத்த குரலில் பேசும் கொடிய சொற்களைக் கொண்ட நம் தாய் உறங்கமாட்டாள். அன்னை உறங்கினாலும், உறங்காத கண்களைக் கொண்ட ஊர்க்காவலர்கள் உறங்கினாலும், அகன்ற வானத்தின்கண் திங்கள் தோன்றிப் பகல்போல் ஒளி செய்யும், அத்திங்கள் மறைந்தாலும், எலியை இரையாகக் கொள்ளும் வலிய வாயினையுடைய கூகை உறங்காமல் குழறத் தொடங்கும், பொந்தில் வாழும் அக்கூகை உறங்கினாலும், மனையில் வாழும் கோழிச்சேவல் தன் குரலை எழுப்பிக் கூவும், ஒருநாள் இவை எல்லாம் உறங்கின காலத்தும் என்னிடத்தினின்று பிரிந்து நிலையில்லாத நெஞ்சினையுடைய தலைவரோ வாராது ஒழிவார் என்பதை,

"அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து
ஆதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட்டு அன்ன
பல்முட் டின்றால் தோழி நம்களவே"

(அகம்.பா.122:19-23)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இவ்விடத்தில் தித்தனது காவற்காட்டின் அருமையை உவமையாக தலைவி எடுத்துரைப்பதன் மூலம் ஆளுமைப்பண்பு வெளிப்படுகின்றது.

அலர்

தலைவன், தலைவியரது களவொழுக்கத்தால் ஊரில் அலர் எழுவது இயற்கை. தலைவனது பரத்தைமை ஒழுக்கத்தால் கற்பு வாழ்க்கையிலும் ஊரில்

அலர் எழும். ஊர்ப்பெண்கள் கூடிப்பேசும் இவ்அலருக்குப் போர்க்கள ஆரவாரங்கள் உவமையாக அமைவதினை, போரில் வல்லவனான பாண்டியன் நெடுஞ்செழியன், கூடற்போர்க்களத்தில், தம்முள் ஒன்றுசேர்ந்து போருக்கு எழுந்த சோழர் ஆகிய இருபெரும் வேந்தர்தம் சேனைகள் கலங்குமாறு தாக்க, அவர்கள் தம் போர் முரசங்களை விடுத்துப் புறமுதுகிட்டு ஓடினர். அதைக் கண்ட பாண்டியனின் வீரர்கள் ஆரவாரம் செய்ததைவிட, பரத்தையுடன் தலைவன் நீராடினான் என்பதினால் ஊரில் அலர் பெரிதாக எழுந்ததை,

"எஃகுடை எழில்நலத்து ஒருத்தியொடு நெருநை
வைகுபுறம் பொதிந்து யாம்காப்பவும் கையிகந்து
அலர்ஆகின் றால்தானே மலர்தாரை
மையணி யானை மறப்போர்ச் செழியன்
................. ................. .................
ஒருபுறம் கண்ட ஞான்றை
ஆடுகொள் வியன்களத்து ஆர்ப்பினும் பெரிதே" (அகம்.பா.116: 09-19)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இவ்விடத்தில் பாண்டிய மன்னனின் போர் வெற்றியினைப் பறை சாற்றியும், தலைவன் தலைவியின் அலர் வெளிப்பாடுடன் ஒப்புமையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

கரிகால் வளவன் பெரும்புகழ் கொண்டவன், வலிமை நிறைந்தவன், அவன், வெண்ணிவாயில் என்னும் இடத்தில் அவனொடு மாறுகொண்டு எழுந்த மன்னர்களின் வீரமுரசம் வீழ்ந்துப்பப் போரிட்டான். பதினொரு வேளிருடன் இருபெரும் வேந்தரும் நிலைகுலைய, அவரது மிக்க வலிமையைக் கெடுத்து அவரை வென்ற நாளில், அட்ட மன்னரால் அழுந்தூரில் எழுந்தது. அழுந்தூர், கரிகாலனின் தாய் பிறந்த ஊர். நாட்டாட்சி பெறும்முன் கரிகாலன் அங்கு வாழ்ந்திருந்தான் என்னும் வரலாற்றுச்செய்தி, தலைவனது பரத்தமையால் எழுந்த அலருக்கு உவமையாகக் கூறப்படுவதினை,

"போதுஆர் கூந்தல் நீவெய் யோளொடு
தாதுஆர் காஞ்சித் தண்பொழில் அகல்யாறு
.................................................
மொய்வலி அறுத்த ஞான்றை
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே" (அகம்.பா.246: 05-14)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இவ்விடத்தில் கரிகால்வளவனின் பேராற்றலை அறியமுடிகின்றது.

முடிவுரை

சங்க பாடல்களின் மூலம் தலைவன், தலைவியின் ஒழுக்கங்களை வெளிப்படுத்தும் நிலையில் மன்னர்களின் அரசியல் சூழலையும் வரலாற்று செய்திகளையும் ஆளுமையாக வெளிப்படுத்தி இருக்கும் தன்மையை அறியமுடிகின்றன.

❑❑❑